விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | வைகாசி: 28 | துல் ஹஸ்தா: பிறை 17 | இதழ்: 119
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 11-06-1990


## 40 லட்சம் மாணவர்களுக்கு காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

40 லட்சம் மாணவர்கள் தம்மை காப்புறுதி செய்ய வழியமைக்கும் புதியதிட்டம் இலங்கையில் முதல்தடவையாக, அடுத்த செப்டம்பர் மாதம் தொடக்கம் சகல பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப் படவுள்ளது என இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

இலங்கை

## ராணுவ அதிகாரிகளுக்கு பாகிஸ்தானில் பயிற்சி

[கொழும்பு]

இலங்கை பாதுகாப்புபடையின் சிரேஷ்ட அதிகாரிகள் பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பயிற்சி நிலையத்தில் முதல் தடவையாக விசேஷ இராணுவ பயிற்சி பெறவுள்ளனர்.

அதிஉயர்ந்த ராணுவ பதவியான 'பிறிகேடியர்' போன்ற தரத்திலுள்ள பல

(8ம் பக்கம் பார்க்க)

மாகாணசபைகள் திருத்தச் சட்டமூலம்:

## உயர் நீதிமன்றத் தீர்ப்பு 13-ல் வழங்கப்படும் பாராளுமன்ற விவாதம் 15-ல் இடம்பெறும்

(மணிசேகரன்)

மாகாணசபைகள் 1987ம் ஆண்டு 42ம் இலக்க சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கான திருத்தச்சட்டமூலம் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரண்பட்ட விதத்தில் அமைந்துள்ளதா என்பதை ஆராய்வதற்காக எதிர்வரும் 13ம் திகதி புதன்கிழமை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அன்றையதினமே தீர்ப்புவழங்கப்படும். இதனை அடுத்து இந்தச் சட்டமூலம் எதிர்வரும் 15ம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமெனவும் தெரியவருகிறது.

இச்சட்ட மூலத்தின் பிரதிகள் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு இருக்கின்றது என விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட கோண்டாவில் செயலகம் தெரிவித்துள்ளது.

உத்தேச திருத்தச்சட்டமூலம் தேசநலன் கருதி மிகவும் அவசரமும், அவசியமும் வாய்ந்தது என அமைச்சரவை அத்தாட்சிப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

1988ம் ஆண்டு இல. 2 மாகாணசபைகள் தேர்தல் சட்டத்துக்கு இணங்க மேற்படி திருத்தச் சட்டமூலம் அமுலுக்கு வருகிறது என தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வ அறிவிப்பு வழங்கும் திகதியிலிருந்து ஒருவார காலத்தில் மாகாண சபையை கலைக்க வழிபிறக்கும் என சட்டஅறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(அ)

இடைக்கால தீர்வுக்கான

# இறுதிச் சந்தர்ப்பத்தை அரசுக்குக் கொடுத்துள்ளோம்!

பாடசாலை அதிபர்கள் கருத்தரங்கில் அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

**இடைக்கால தீர்வுக்கான முயற்சிகள் நிராகரிக்கப்பட்டால் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடுவதைவிட வேறுவழி இல்லை. இடைக்கால தீர்வுக்கான இறுதி சந்தர்ப்பத்தை அரசுக்கு கொடுத்துள்ளோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றுக்காலை யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினர்.**

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கு ஒரு கருத்தரங்கை நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடத்தியது. மேற்படி கருத்தரங்குக்கு வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் தலைமை வகித்தார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அங்கு தொடர்து உரையாற்றுகையில் கூறியதாவது: சிங்கள பேரினவாத சக்தி

(8-ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## மோசடியில் ஈடுபடுவோரை கண்காணிக்க தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலயத்திலுள்ள குற்றபுலன் விசாரணைப் புரிவினர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபடுவோரை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றுர்கள்.

கொழும்புத் துறைமுகத்தில் கப்பல் கப்டன் ஒருவரினல் வடிவமைக்கப்பட்டதாகக் கூறப்படும் போலி மாலுமி சீட்டுகான பத்திரங்கள் இத்தாலி

[8ம் பக்கம் பார்க்க]

## அதிபர்களும் ஆசிரியர்களும் நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டும்!

- டொமினிக்

(யாழ்ப்பாணம்)

அதிபர்களும் ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து சமுதாயம் பயன்பெறக்கூடிய நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டும். மாணவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேறும் காலத்தில் பூரண மனிதனக அத்துடன் நற்பிரசையாக வெளியேற அதிபர்களும் ஆசிரியர்களும் வழிவகுக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறினர்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கு ஒரு கருத்தரங்கை நேற்றுக் காலை நடத்தியது.

அந்தக் கருத்தரங்கில் மேலும் அவர் உரையாற்று

(8ம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி மாநாட்டில் ஈரோஸ் கலந்துகொள்ளாது

(யாழ்ப்பாணம்)

இன்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவிருக்கும் சர்வகட்சி மகாநாட்டில் ஈரோஸ் கலந்து கொள்ள மாட்டதென ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பாகிஸ்தானும், சீனவும்

## யுத்த தாங்கிகளைத் தயாரிக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்து

(கராச்சி)

யுத்தத் தாங்கிகளை நிர்மாணிப்பதிலும், கூட்டாகப் பிரதான யுத்தத்தாங்கி ஒன்றை உருவாக்குவதிலும் சீன பாகிஸ்தானுக்கு உதவியையும், தொழில் நுட்ப ஒத்துழைப்பையும் வழங்க இருக்கிறது.

இதற்கான உடன்படிக்கை ஒன்றில் இருநாடுகளும் கைச்சாத்திட்டிருக்கின்றன.

பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட புதிய முதலாவது யுத்த தாங்கி தொழிற்சாலையிலிருந்து வெளியேறியுள்ளது.

இது சீனவின் ரி 69 தாங்கியின் நவீனமயப்படுத்தப்பட்ட ரகமாகும். முழு அளவிலான உற்பத்தி டிசம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கவசவாகனமொன்றையும், படைவீரர்களை ஏற்றிச் செல்

(8-ம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கில்

## இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க அபிவிருத்தி நடவடிக்கைகள்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணசபையின் கைத்தொழில் சக்திவள அமைச்சினல் வடக்கிலும், கிழக்கிலும் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட விருப்பதாக மேற்படி அமைச்சின் நிரந்தரச் செயலாளரான திரு. க. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இதன்மூலம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள பல இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பும் பயிற்சியும் அளிக்கப்படுமென்றும் அவர்

(8ம் பக்கம் பார்க்க)

உலகக் கிண்ண

## உதைபந்தாட்டம்

(ரோம்)

இத்தாலியில் நேற்று நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வெறிபெற்றேர் விபரம்:

செக்கொஸ்லாவியா ஐக்கிய அமெரிக்காவை 5-1 கோல்களால் வெற்றிபெற்றது.

# தலபுராண அரங்கில் பங்குகொள்ள புலவர்கள், கவிஞர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தலபுராணம் பாடி, அரங்கேற்றும் சிறப்புவிழா அடுத்த மாதம் பத்தாம் திகதி குஞ்சுப் பரந்தன் பொறிக்கடவை அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இவ்வாலயம், கண்ணகை அம்பாள் வழிபாடு தோன்றியகால - வரலாற்றுப் பெருமையுள்ளது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் ஈழநாட்டிலுள்ள தமிழ்ப் புலவர்களைக் கௌரவிக்கும் நோக்குடனும், தமிழ் மன்னர் காலத்து, தமிழ்ச்சங்கக் கவி அரங்கேற்றங்களை நினைவு கூர்ந்து தமிழ் மக்கள் கண்டு களிக்கவும் இப்பெருவிழா நடைபெறுகிறதென்று தெரிவிக்கப்பட்டது.

அரங்கேற்ற விழாவில்: புலவர்கள் பாடல்களைப் பாடி முடிக்க அப் பாடல்களுக்குப் பொற்கிழி வழங்கி புலவர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பங்கு பற்றும் புலவர் பெருமக்களுக்கு விழாக்குழுவினரால் அம்பாள் ஆலயத்தின் பெயரால் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பங்குபற்ற விரும்பும் புலவர்கள், கவிஞர்கள் தலபுராண மரபுக்கமையவே புராணகாவியத்தைப் பாடுதல் வேண்டுமென்றும் பங்கு பற்றுவோர் கடிதமூலமாகவோ, நேரிலோ விழாக்குழுவினருடன் தொடர்புகொண்டு அம்பாள் ஆலயத்தல வரலாற்றுப் பிரதியையும், ஏனைய விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கோரப்பட்டுள்ளது.

புலவர்கள் பாடும் பாடற் பிரதிகள் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் விழாக்குழுவினருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்படும் புலவர்கள் அடுத்தமாதம் 9ம் திகதி மாலை பரந்தன் சந்தியிலிருந்து சங்ககாலப் புலவர்கள் போன்று தம்மை அலங்கரித்துக்கொண்டு, அலங்கார மங்கள ஊர்திகளில் ஊர்வலமாக ஆலயத்திற்கு அழைத்து வரப்படுவார்கள். அடுத்தநாள் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அரங்கத்தில் அறிஞர்களும், அடியார்களும் கூடியிருக்க அம்பாள் தலபுராணப் பாடல்களைப் புலவர்கள்பாடி, அரங்கேற்றம் செய்வார்கள். ஈழத்திலுள்ள தமிழ்ப்புலவர்களை, கவிஞர்களை இத்தல புராண அரங்கத்தில் பங்கு கொண்டு சங்ககால கவியரங்கத்தை நினைவுகூர முன்வருமாறு அமைப்பாளர்கள் அழைத்துள்ளனர். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ம. பத்மநாதன், உருத்திரபுரம் கொத்தணி அதிபர், இந்துமகா வித்தியாலயம், கிளிநொச்சி.

# அகதிகள் குடும்பத்துக்கு மாற்றுக் காணிகள் வழங்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கியதும், நாட்டுப் பிரதேசத்தில் அமைந்ததுமான ஆனைவிழுந்தான் அகதிகள் குடியேற்ற விஸ்தரிப்புக் கருதி ஆனைவிழுந்தான் குளம் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

1983 ஜூலைக் கலவரகால அகதிகளின் புனர்வாழ்வை நோக்கமாகக் கொண்டு, பாரிய காட்டுப் பிரதேசமாகவும், கொடிய விலங்குகளின் உறைவிடமாகவும் விளங்கிய ஆனைவிழுந்தான்குளக் குடியேற்றத் திட்டம், முன்னாள் கிளிநொச்சி அரசஅதிபர் திரு. என். ஜெயநாதனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வகதிகள் குடியேற்றத் திட்ட வீடமைப்பு மற்றும் கிணறு நிர்மாணப் பணிகளைப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட 'றெட்பானா' நிறுவனம் திட்டமிட்டபடி வேலைகளை பூர்த்தி செய்யாமல் இடைநடுவில் நிறுத்திவிட்டதாக ஆனைவிழுந்தான் கிராம முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் அரசாங்க அதிபரிடம் தெரிவித்தனர்.

ஆனைவிழுந்தான் குளப் பாரிய நிர்மாணப் பணிகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தீவிரமாக மேற்கொள்ளப்படும் அதேவேளை, இக்குளத்தில் 35 அகதிக் குடும்பங்களும் பிள்ளையார் ஆலயம், தேவாலயம் முதலானவை மூழ்கிவரும் அபாயமும் உருவாகிவருவதையும் அரச அதிபர் திரு. மாணிக்கவாசகரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த 35 குடும்பங்களுக்கும் மாற்றுக் காணி வழங்க நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இக்குடும்பங்களுக்கு மாற்றுக் காணி வழங்கவேண்டும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும், அரச திணைக்கள இணைப்பாளர் திரு. சிவபாதமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (83)

# இப்படியும் நடக்கிறது

"ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் எமது தமிழ்த் தேசிய உடையணிந்து பாடசாலைக்கு வரவேண்டும். குறிப்பாக, வெள்ளிக்கிழமையிலாவது, இத்தேசிய உடை அணியும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்"

இவ்வாறு, வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க எழுச்சி மகாநாட்டில் சொன்னாலும் சொன்னார்...... வேட்டிக்கே 'வேட்டு' வைக்குமளவுக்கு கருத்துக் 'கணை'கள் எழத் தொடங்கிவிட்டன'

எழுச்சி மகாநாட்டின் இரண்டாள் நாள் நிகழ்ச்சியின் போதும்; வெளியிலும் காதிலே கேட்டவை இவை:

"தேசிய உடை அதாவது வேட்டி கட்டினால்தான் தமிழ் ஆசிரியர்என்று பொருளா? அல்லது தனித்துவமா?

"ஆசிரியர்கள் புதிதாக வேட்டி அணியவேண்டும் என்றால் ஏற்கனவே காலம் காலமாக வேட்டி கட்டும் ஆசிரியர்களுக்குஏதாவது 'ஊக்குவிப்பு போனஸ்' கிடைக்குமா?

"புதிதாக வேட்டி கட்டுவதென்றால் வேட்டி வாங்க விசேட படி கிடைக்குமா?

"புதிதாக வேட்டிகட்டத் தொடங்கினால் 'இவருக்கு ஐம்பதாகி விட்டது' என்ற மனோநிலையை ஏற்படுத்தாதா? இந்த (மற்றவர்களின் கேலி) மன உளைச்சலினால் புதிதாக வேட்டிகட்டப்போகும் ஆசிரியருக்கு ஓரிருவயது கூடாதா?

"ஆசிரியர்களுக்கு மட்டும் ஏன் இந்த யோசனை? கல்வித்திணைக்கள ஊழியர்கள் அனைவருமே வேட்டிகட்டினால் என்ன?',

"வேட்டி அணிவதென்றால்... ஐம்பது வயதுக்குள் ஒரு கலாசாரம்? ஐம்பது வயதுக்கு மேல்ஒரு கலாசாரமா?

"நீள் காற்சட்டை என்றால் ஒரு கிழமைக்கும் உபயோகிக்கலாம். வேட்டி என்றால் தினம்தினம் மாற்றி ஆகவேண்டுமே? ஏழை ஆசிரியர்களின் நிலை என்னஆகும்?

பயிலுநர் ஆசிரியர் ஒருவர் கூறுகிறார்: வேட்டி கட்ட நாங்கள் தயார். வயது வித்தியாசமின்றி ஆசிரியர்கள் அனைவருமே வேட்டி அணிவார்களா?

வேட்டிக்கு வேட்டா? வோட்டா? ஆசிரியர் உலகம் முடிவு எடுக்கட்டும்.

'ஊடுருவி'

# சித்திரை பூரணைவிழா போட்டி முடிவுகள்

[நாவற்குழி]

நாவற்குழி அறிவொளி மன்றம் சித்திரைப் பூரணை விழாவை முன்னிட்டு நடாத்திய போட்டி முடிவுகள் பின்வருமாறு:

இசைப்போட்டி ஆரம்பப் பிரிவு: சு. கயல்விழி, இ. சுகிர்தன், சி. மயூரன்ராஜ், க. கமல்ராஜ்.

கீழ்ப்பிரிவு; நா, வெண்மதி, க. ஜெனிவா, வி. உதேஸ்,

மத்திய பிரிவு: நா. செவ்வந்தி, க. சுமதி, க. ரதினி, க. சஜீவா, மேற்பிரிவில்: நா. சுதன் க. சுகந்தினி.

தமிழ் பேச்சுப்போட்டி கீழ்ப் பிரிவு: இ. சுகந்தரூபி, நா. வெண்மதி, க. ஜெனிவா, மத்தியபிரிவு: க. இரவீந்திர ராசா, க. ஜெயதீஸ்வரி. மேற்பிரிவு: க. சுகந்தினி, ம. கருணாகரன்.

ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டி: க. ஜெனீவா, இ. சுகந்தரூபி, கு. சர்மிளா ஆங்கிலப்பாட்டு நிகழ்ச்சி மத்திய பிரிவு: நா. செவ்வந்தி, ப. சியாமதி, ப. பாமதி. கீழ்ப்பிரிவு: நா. வெண்மதி, வி. உதேஸ், தி. விஜித்தா.

பேச்சுப்போட்டி மேற்பிரிவு; நா. சுதன், க. கஜமுகன்

கட்டுரைப்போட்டி கீழ்ப் பிரிவு: இ. துஷ்யந்தி, தி. விஜித்தா, க. ஜெனிவா, மத்திய பிரிவு: சு. வாசுகி, து. சுபா க. ரதினி, மேற்பிரிவு: சு. கிருஷ்ணராஜ், ந. கிருஜா, இ. மரியசீலன்.

தமிழ் உறுப்பெழுத்துப் போட்டியில் ஆரம்ப பிரிவு; இ. சுகிர்தன், சி. மயூரன்ராஜ் சு. கயல்விழி, பொது அறிவுப் போட்டியில்: சு. கிருஷ்ணராஜ் க. இரமணன், நா. சுதன்.

திருக்குறள் போட்டி: சு. கிருஷ்ணராஜ், சி. பிரதீபன், க. ஜெனீவா. [107]

# மதுபான விற்பனைத் தடை

(வேலணை)

தீவுப் பகுதியில் சட்டவிரோதமாகக் கள், கசிப்பு, சாராயம் என்பன விற்பனைசெய்வது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவுகளை மீறி நடந்தால் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (75)

# லண்டனில் குண்டுவெடிப்பு 17பேர் காயம்

(லண்டன்)

லண்டன் வடபகுதியிலுள்ள இராணுவத் தளமொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களின் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு ஐரிஷ் தீவிரவாதிகளே காரணமாக இருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகிறது.

# நயினாதீவு உற்சவ காலத்தில் சேவையில் ஈடுபடும் படகுகளுக்கான நிபந்தனை

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழாக் காலங்களில் நயினாதீவுவரும் அடியார்களை ஏற்றிச்செல்லும் சகல மோட்டார் படகுகளும், உரிமையாளர்களும் பின்வரும் நிபந்தனைகட்கு அமைவாக தமதுசேவையை நடத்தவேண்டும். இதனை மீறுபவர்கள் உடனடியாகச் சேவையினின்றும் நிறுத்தப்பட்டு நடவடிக்கைக்கு உள்ளாவர் என்று வேலணை உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

நிபந்தனைகள் பின்வருமாறு:

★ ஒவ்வொரு படகிலும் அவற்றின் பெயர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அவற்றின் இலக்கங்களும் தெளிவாக எழுதப் பட்டிருக்க வேண்டும்.

★ வளர்ந்தவர்கட்கு ஒரு வழிப் பயணத்திற்கு நாலு ரூபாவும், சிறுவர்கட்கு இரண்டு ரூபாவும் அறவிடவேண்டும். பெறப்படும் தொகைக்கு உரிய பற்றுச்சீட்டு வழங்கப் படவேண்டும். பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வேலணை உதவி அரசாங்க அதிபரின் பார்வைக்கு 23 ம் திகதிக்குமுன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

★ படகுகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலாக பிரயாணிகளை ஏற்றிச் செல்லக்கூடாது.

★ அனுமதிப்பத்திரம் பெற்ற தண்டேல் யந்திரஇயக்குநர் ஆகியோர் மட்டுமே கடமையில் ஈடுபடமுடியும்.

★ எப்போதும் படகுகளில் உயிர் பாகாதுப்பு வளையங்களை வைத்திருக்க வேண்டும்.

★ படகு கூடாரத்தின் வெளிப்புறத்தில் பயணிகளை ஏற்றுதல் கண்டிப்பாக நிறுத்தப்படவேண்டும்.

★ அனைத்து படகுகளும் குறிகாட்டுவான் இறுப்பிட்டி துறைகட்கு கட்டாய சேவையில் ஈடுபடவேண்டும்.

★ வேலணை உதவி அரசாங்க அதிபரின் முன் அனுமதியின்றி எப்படகும் சேவையில் ஈடுபடக்கூடாது. [153]

J. D. C. S. I. தொழிற்பயிற்சி நிலையம்

## விண்ணப்பம் கோருதல்

தையல், மனையியல் கைப்பணி துறைகளில் பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1990-ம் ஆண்டு ஜூன் 25ம் திகதி ஆரம்பமாகும் இப்பயிற்சிகள் ஆறுமாதகால தொடர்ப்பயிற்சியாக இருக்கும் முற்பணம் ரூபா 200-00 விண்ணப்பதாரர்கள் 8-ம் ஆண்டுவரையான கல்வித்தகைமை பெற்றிருத்தல் வேண்டும். உரியபணம் செலுத்துபவர்களுக்கு தங்குவதற்கான விடுதிவசதிகள் செய்து தரப்படும். ஜூன் 20-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

திருமதி ஆர். தம்பிஅப்பா
காரியதரிசி
கிறீன் ஆஸ்பத்திரி, மானிப்பாய்.

(சி 3973)

# கண்காட்சியும் கருத்தரங்கும்

[யாழ்ப்பாணம்]

பிரித்தானிய கவுன்சில் நூலகம் யாழ். பல்கலைக் கழக நூலகத்தோடும் இலங்கை நூலக சங்கத்துடனும் இணைந்து நடாத்தும் கண்காட்சியும், கருத்தரங்கும் ஜூலை மாதம் 3ம், 4ம் 5ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்பும் நூலகங்கள், உள்ளூராட்சி மன்ற உதவிக் கல்லூரிகள், விண்ணப்படிவத்தினை உதவி நூலகர், வாசகர் சேவை, பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு சுயவிலாசம் எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

# வினாவிடை போட்டி

(உடுவில்)

தேசிய கல்வி மறைக் கல்வி விவிலிய ஆணைக்குழு ஆதரவில் யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் நடாத்தும் நான்காவது அகில இலங்கை தேசிய விவிலிய வினாவிடைப் போட்டி அகில இலங்கை மட்டத்தில் இவ்வருடம் அக்டோபர் 20 ம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டி பாடசாலை மட்டம், கிளை மட்டம், மாவட்ட மட்டம், அகில இலங்கை மட்டம் ஆகிய நிலைகளில் மூன்று பிரிவாக நடாத்தப்படும்,

பாடசாலை மட்டப் போட்டிகள் ஜூன் மாதம் 30ம் திகதிக்கு முன்பாக நடைபெறும். கிளை மட்டப் போட்டிகள் ஜூலை 7, 8, 14, 15-ம் திகதிகளிலும், மாவட்டப் போட்டி செப்டம்பர் 15ம் திகதியும் நடைபெறும். (109)

# பெருநாட்டில் நில அதிர்வு!

## 100 பேர் காயம்; பல வீடுகள் சேதம்!

(லீமா)

பெருநாட்டில் அண்மையில் இடம்பெற்ற நில அதிர்வினால் நூற்றுக்கு மதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளதுடன் வீடுகள் உட்படப் பல கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தத் திடீர் நில அதிர்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணியில் பெருநாட்டு அரசு தீவிரமாக ஈடுபட்டுவருகிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றபோதிலும் அவர்களது நிலைகுறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

தற்பொழுது ஏற்பட்ட நில அதிர்வுபோல முன்னர் ஒருதடவையும் லீமாவில் நில அதிர்வு ஏற்பட்டு நூற்றுக்கணக்கான மக்கள் பலியானது குறிப்பிடத்தக்கது.

இந்தமுறை இடம்பெற்ற நில அதிர்வினால் உயிரிழப்புக்கள் இல்லாதபோதும் பல பெறுமதி வாய்ந்த கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. (து)

---

## சோவியத் ஆசிரியர்கள்

# அணுஆயுத பரிசோதனைகளை நிறுத்துமாறு வேண்டுகோள்!

(மாஸ்கோ)

அணுஆயுத பரிசோதனைகளை நிறுத்துமாறு சோவியத் யூனியனிலுள்ள ஆசிரியர்கள் அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சோவியத்யூனியனில் அண்மையில் ஆசிரியர்களை உள்ளடக்கிய சமாதானக் கருத்தரங்கொன்று நடைபெற்றது.

இக்கருத்தரங்கின் இறுதியிலே மேற்கண்ட வேண்டுகோளை இந்த ஆசிரியர்கள் விடுத்துள்ளனர்.

அணுஆயுத பரிசோதனை உலகில் எப்பாகங்களில் நடத்தப்பட்டாலும் அவை கண்டிக்கப்படவேண்டியதொன்றாகும்.

இந்தப் பரிசோதனைக்கு அனைத்து நாடுகளும் தடைவிதிக்கவேண்டும்.

அணுஆயுத வெடிப்புகள் ஏற்படுத்தப்பட்ட இடங்களில் மக்கள் அனுபவித்த பயங்கர அனுபவங்கள், இழப்புகளைக் கருத்திற்கொண்டு இதனை உடனடியாக நிறுத்துவதற்கு அனைவரும் முன்வர வேண்டுமென்றும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

---

## தமிழகத்தில்

# இந்து முன்னணி தலைவர் உட்பட 300 பேர் கைது

(சென்னை)

தமிழ்நாடு மாநில இந்து முன்னணி அமைப்பாளர் திரு. ராமகோபாலன் உட்பட 300 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

மாநிலமெங்குமுள்ள இந்த முன்னணியின் அமைப்பாளர்கள் தேடித் தேடிக் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் கைதுசெய்யப்பட்டதற்கான காரணமெதுவும் தெரிவிக்கப்படவில்லை. (து)

---

# சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி பெயர் மாற்றப்படும்

(மாஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியின் பெயரை மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மாஸ்கோவிலிருந்து கிடைத்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜூலை மாதம் 2ம் திகதி சோவியத் கட்சியின் மாநாடு நடைபெறும்போது இப்பெயரை மாற்றுவதா என்பது குறித்து ஆராயப்படும். (அ)

---

## உப்பு நீரிலும் விவசாயம்

(வாஷிங்டன்)

உப்பு நீரிலும் விவசாயம் செய்து சிறந்த அறுவடையைப் பெற முடியும் என்று ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க நாட்டு ஆராய்ச்சியாளர்கள் பல ஆண்டுகளாக மேற்கொண்ட ஆராய்ச்சியின் பலனாக இந்தச் சாதனையை ஏற்படுத்தியுள்ளனர்.

தக்காளி, பழவகைகள் போன்றவற்றை கடல் நீரைப் பயன்படுத்தி அறுவடை செய்ய முடியுமென்றும் இந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். (து)

---

## சோவியத்தில் 120,000 வெளிநாட்டு மாணவர்கள்

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் 150 நாடுகளைச் சேர்ந்த 120,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

வெளிநாட்டு மாணவர்களுக்கு முதல் வருடத்தில் ரஷ்ய மொழி மாத்திரமே போதிக்கப்படுகிறது.

சிரியா, எகிப்து ஆகிய நாடுகளின் மாணவர்களின் கல்விச் செலவின் பாதியை அந்நாடுகளே வழங்குகின்றன.

சோவியத்திலுள்ள 110 நகரங்களில் வெளிநாட்டு மாணவர்கள் கல்வி பயின்று வருவதுடன் 53 உலக நாடுகளில் சோவியத் கல்வித் தராதரப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (து)

---

## ‘துட்டகைமுனுவைப்போல் பகைவரையும் நேசிக்கப் பழக வேண்டும்!’’

### — ஜனாதிபதி

(அனுராதபுரம்)

‘பகைவரையும் நேசிக்க வேண்டும் என்ற தத்துவத்தைத் துட்டகைமுனு மன்னன் உலக மாந்தர்களுக்குத் தெரிவித்துள்ளார். தற்போதைய காலகட்டத்தில் இதே தத்துவம், மிகவும் அவசியமாகும்.’’

‘மகாபோசன்’ தினத்தை முன்னிட்டுத் திம்புகலையில் நிகழ்ந்த பௌத்தமத வழிபாட்டு நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

‘அனுராதபுரத்தை எல்லாள மன்னன் ஆண்ட காலத்தில் ஐக்கிய இலங்கையை உருவாக்கும் இலட்சியத்துதுன் நிகழக்கூடிய யுத்தத்தில் ஆயிரக்கணக்கான வீரர்கள் உயிரிழப்பதையிட்டு துட்டகைமுனு கவலை கொண்டிருந்தார். அதனைத் தவிர்த்து துட்டகைமுனு எல்லாளன் நேரடியாக யுத்தம் புரிந்தனர். எல்லாளன் இறந்த பின்னர் அவரது நினைவாக நினைவுத்தூபி எழுப்பிச் சகலரும் அவருக்கு மரியாதை செலுத்தவேண்டும் என்று துட்டகைமுனு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

துட்டகைமுனுவின் வரலாற்றினைப் பின்பற்றி பகைவர்களையும் மதித்துக் கௌரவிப்பது அவசியம்’’ என்று ஜனாதிபதி மேலும் கூறினார்.

---

# வவுனியா மாவட்டத்தில் 60 இணக்க மன்றுகள்

(வவுனியா)

‘‘பணம் படைத்தோரும், வசதி நிலையில் உள்ளவரும் வாய் வலிமை மிக்கவர்களும், நீதியைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வதைத் தடுப்பதே இணக்க மன்றின் தலையாய நோக்கமாகும்.’’

இவ்வாறுவவுனியாமாவட்ட இணக்கமன்றுகள் அமைப்பாளர் திரு. மா. பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

‘‘வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மக்களுக்கு இணக்க மன்றுகளின் செயல்திட்டங்கள் ஒழுங்குகள் ஆகியன பற்றி ஏற்கனவே தெரியும். முன்பு இணக்கச் சபைகளின் அமைப்புக்களினால் நீதி நிர்வாகம் நடைபெற்று வந்தபடியால் இணக்க மன்றுகளை நடைமுறைப்படுத்துவதில் பெரிய சிரமங்களை எதிர்நோக்கவேண்டியதில்லை’’ என்றார்.

வவுனியா மாவட்டத்தில் ஏறக்குறைய அறுபது இணக்க மன்றுகள் அமைக்கப்படவுள்ளன. ஏற்கனவே பரீட்சார்த்தமாக இயங்கி வந்த இணக்க சபைகள் தற்சமயம் இணக்க மன்றுகளாகச் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் தாண்டிக்குளம், ஓமந்தை ஆகிய பிரதேச இணக்க மன்றுகளின் நடுவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் தெரிவு செய்யப்படும் ஐவரும், பொது மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஐவருமாக மொத்தம் பத்துப்பேர் கொண்ட நடுவர் குழு அமைக்கப்படும். இப்பத்துப்பேரில் எழுவரே நடுவர்களாகக் கடமையாற்றுவர். மிகுதி மூவரும் ஒதுக்கப்பட்ட நடுவர்களாகச் சில நடுவர்கள் சுகவீனமுற்ற வேளைகளிலோ அல்லது தவிர்க்க முடியாத காரணங்களினால் சமுகமளிக்காத வேளையிலோ கடமை ஆற்ற அழைக்கப்படுவார்கள்.

கொலை, கொள்ளை, பலாத்காரம் தவிர்ந்த விடயங்களை தீர்மானிக்கவும், தீர்ப்புக் கூறவும் இவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

---

## வீடமைப்புக் கடன்:

# விண்ணப்பப் படிவத்துக்கு பலத்த போட்டி

(சித்தன்கேணி)

15 லட்சம் வீடமைப்புக் கடன் திட்டத்தின்கீழ் வலிகாமம் மேற்குப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கு மக்கள் போட்டிபோடுகின்றனர்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து விநியோகிக்கப்பட்டுவந்த வீடமைப்புக் கடன் விண்ணப்பப் படிவம் பெருந்தொகையானோரின் வருகையினால் அண்மையிலுள்ள கலாசார மண்டபத்தில் வைத்து விநியோகிக்கப்படுகின்றது.

இதுவரை 1500விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் மேலும் 2000 விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளரிடம் கடித மூலம் கேட்டுள்ளார். (137)

---

# வட - கிழக்கில் 17கால்நடை உத்தியோகத்தர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கால்நடை உத்தியோகத்தர்களாக அண்மையில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்து 17 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான 3 மாதப் பயிற்சி, திருநெல்வேலி மாவட்ட அரசினர் விவசாயப் பண்ணையில் தற்பொழுது நடைபெற்றுவருகின்றன.

பயிற்சி முடிவடைந்ததும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள கமநலச் சேவை நிலையங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (104)

---

## நெதர்லாந்தில்

## காந்தி நினைவாலயம்

(அம்ஸ்ரடாம்)

நெதர்லாந்தின் தலைநகரான அம்ஸ்ரடாமில்மகாத்மா காந்தியின் ’நினைவாலயம் ஒன்றும் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

நெதர்லாந்தில் முதன் முதலாக அமைக்கப்பட்ட இந்த நினைவாலயம் இவ்வருடம் அக்டோபர் மாதம் 2-ம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. (து)

---

## இத்தாவிலுக்கு மின்சார விஸ்தரிப்பு

[கிளிநொச்சி]

பளைப்பகுதியின் பின்தங்கிய கிராமங்களுக்கு மின்சாரம் கிடைக்க மேலும் ஆவனசெய்யப்படும் என்று பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இத்தாவில் கிராமத்தில் 6 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட மின்சார விஸ்தரிப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

இத்தாவில் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இவ் மின்சாரம் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. பாப்பா.மேலதிக அரச அதிபர் எஸ். அமிர்தலிங்கம், ஆகியோரும் கலந்துகொண்டனர். [83]

---

# நிலுவைப்பணம் செலுத்தத் தவறினால் மின்தடைகள் ஏற்படலாம்!

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் சட்டவிரோத மின் பாவனையாளர் இலங்கை மின்சாரசபைக்கு 14 கோடிரூபா செலுத்த வேண்டியுள்ளதாக யாழ் உள்ளூராட்சி பிரதேச ஆணையாளர் திரு. எஸ். திவகலாலா தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மின்பாவனையாளர்களின் சட்டவிரோதச் செயல் காரணமாக யாழ். உள்ளூராட்சி பிரதேச சபை இலங்கை மின்சார சபைக்கு 1983 ஆண்டு முதல் 1990 ஆண்டு வரைக்கானநிலுவைப் பணமாக 14 கோடி ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

மேற்படித் தொகையினை நாம் வழங்கத்தவறும் பட்சத்தில் பரவலான மின்தடைகள் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவித்த அவர் இதன் தாக்கத்தினால் யாழ் மாவட்டம் பல வழிகளிலும் பெரும் பாதிப்பு அடையலாம் என்றும் தெரிவித்தார். (51)

### மணிவாக்கு

நம்மை நாமே கட்டுப்படுத்த நாம் எப்போதும் இறைவனை இறைஞ்ச வேண்டும். அப்போது தான் நாம் மற்றவர்களின் சேவகன் ஆகலாம்.

## நமது நோக்கு

# மீன்பாடும் தேன் நாட்டில் மீனவர்படும் வேதனை!

மட்டக்களப்பு மக்களுக்கு இயற்கை வழங்கிய பரிசு அதன் வாவி. அது அழகைத் தருகிறது; பாடும் மீன் பரவசமூட்டுகிறது.

மீன்கள் உணவாகின்றன; மீன்பிடித்தொழில் பலருக்கு வேலை வாய்ப்பைத் தருகின்றது.

அந்த வாவியிற் பிடிக்கப்படும் மீன் வகைகளுக்கு ஒருவித நோய் பிடித்துள்ளதெனச் செய்திகள் வந்தன.

சில மீன்களுக்குள் புழுக்கள் இருப்பதாகவும் செய்திகள் வந்தன.

தொடக்கத்தில் உன்னிச்சை, வாகனேரி போன்ற இடங்களிலுள்ள நன்னீர்க் குளங்களிலேயே மீன்களுக்கு நோய் என்ற செய்தி பரவியது.

எனவே மீன் உண்பதைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சில வாரங்களின் பின் செய்தியின் வேகமும் பரபரப்பும் சற்று நீங்கியதும், மீனை மக்கள் உணவிற் சேர்க்கத் தொடங்கினார்கள்.

ஆனால், கடலிலும் மீன்களுக்கான நோய் பரவியுள்ளது என்ற செய்தி வந்துள்ளது. மீண்டும் மக்கள் பரபரப்படைந்து மீனுணவைக் கைவிட்டனர்.

இத்தகைய வேளைகளில், மீனின் நோய்கள் பற்றி ஆராய்ந்து, மக்களுக்கு உண்மையான தகவல்கள் கொடுக்க வேண்டும்.

ஏனெனில், இது ஒரு சுகாதாரப் பிரச்சனை; மக்கள் உடல்நலத்தைப் பாதிக்கும் பிரச்சனை.

கடல்தொழில் திணைக்களத்திடம் விசாரித்தபோது, "இப்போது பிரச்சனை இல்லை; சாப்பிடலாம்!" என்றிருக்கிறார்களாம்.

அந்தத் திணைக்களம் கடல்தொழில் நலம். மீனவர் வேலையின்மை ஆகியவற்றில் அக்கறை காட்டியிருக்கிறது.

சுகாதாரத் திணைக்களம் இது விஷயத்திற் சுறுசுறுப்பாக இயங்கியதா? மக்கள் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள்.

இதேவேளை, மாநகர சபையின் சுகாதாரப் பிரிவும் இது பற்றி அக்கறைகாட்டி, தொடர்புகளையும், இணைப்புகளையும் ஏற்படுத்தி மக்களுக்கு விளக்கமளித்திருக்கலாம்.

தெளிவற்ற நிலை ஏற்பட்டது பற்றி மக்கள் குறைப்பட்டிருக்கிறார்கள்.

நோய் என்ற செய்தி பரவியதால், மீன்பிடியை நம்பி வாழ்ந்த பல குடும்பங்கள் வருமானத்தை இழந்து வாடியிருக்கின்றன.

நிவாரணம் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

இந்த வேளையில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் செயற்பட்டிருக்கிறார்.

அவரது வேண்டுகோளுக்கு இணங்கி ஆய்வு நிறுவனமும், கிழக்குப் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானபீடமும் ஆய்வுகள் மேற்கொண்டு, தற்போது மீன்களில் நோயில்லை எனத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

இத்தகைய சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் உடனடியாகச் செயலாற்றி மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டியது அவசியம்.

## வற்றாப்பளையூர் வாழும் கண்ணகையே!

வற்றாப் பளையெனும்
    மாண்புடைப் பதியினில்
வாழ்வுகொண் டருண்மழை
    பொழியுமெம் அன்னாய்
பற்றாய் நின்பதம்
    பற்றிடும் நாங்கள்
பச்சைநெல் அரிசி
    பயறுபால் சர்க்கரைப்
புற்கையைப் பொங்கிப்
    படைத்துனை வேண்டியுன்
பொற்பதம் போற்றிப்
    பரவுவோம் இன்று
நற்றாய் பிள்ளையை
    நயந்துகாப் பதுபோல்
நாளுமெங் களைநீ
    நன்குகாப் பாயே:

—வெண்பாமணி முருகசூரியன்

[இன்று வற்றாப்பளை பொங்கல்]

# சாமை, தினை, வரகு இருக்க கோதுமைக்கு ஏங்குவதேன்?

கோதுமைக்குப் பதிலாக உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கும் சிந்தனை இப்பொழுது மீண்டும் ஏற்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகளில் 'ஈழநாடு' சுமார் 20 வருடங்களுக்கு முன்பே ஈடுபட்டிருந்தது. இக்கட்டுரை 18-3-1971 'ஈழநாடு' வாரமலரில் வெளியானது. (மறுபிரசுரம்)

நாக. பத்மநாதன்

எங்கள்நாடு வளம் நிறைந்தது. இருந்தும் எமது உணவுத் தேவைக்கு நாம் இன்னும் சில வருடத்தில் பிறநாடுகளை நம்பிக் கையேந்தி நிற்கவேண்டிய நிரந்தர நிலையொன்று உருவாகிவருகிறது. இந்நாட்டுக்குரிய முக்கிய உணவுப் பொருள் அரிசியே. அரிசியை அடுத்து நம்முன்னோர் குரக்கன், சாமை (சாமி), தினை, வரகு, உழுந்து, பயறு எனப் பலவித உணவு வகைகளைப் பேணிப் பயன்பெற்று வாழ்ந்தனர். இதனால் உணவு உற்பத்தி பெருகி நாடு வளம்பெற்றது. வேலைவாய்ப்புஇருந்தது. சத்துள்ள உணவுகளை உண்டு மக்கள் நோயின்றி வாழ்ந்தனர். நிலத்தைப் பொறுத்த அளவிலும், நெற்செய்கைக்குப் பொருந்தாத இடங்கள் வீண்போக விடப்படவில்லை. அவை சிறுதானியத்துக்குரிய 'புன்செய்' நிலமாகப் பயன்படுத்தப்பட்டன.

ஆனால் இன்றைய நிலை என்ன? உள்ளூர் உழுந்தும் பயறும் கிழங்கிற் பலவகை மறைந்துவிட்டன. பனையும் பலாவும் அழிக்கப்படுகின்றன. சிறுதானியச் செய்கை அற்றுவிட்டது. விளைநிலம் பல வெறும் கல்நிலம் ஆகின்றன.

உரமும் சுவையுமுடைய உள்ளூர் உணவுப்பொருளை அழித்து கோதுமையை அத்தியாவசியப் பொருளாக இன்று இலங்கை முழுவதுக்கும் அரிசிக்கு அடுத்த அதிமுக்கிய உணவுப்பொருள் கோதுமையே. கிராமத்திலிருந்து நகரம் வரை எங்கும் கோதுமைமா உணவே பெருகியுள்ளது. ஏனையவை அழிகின்றன. இதில் நாம் கவனிக்கவேண்டிய விடயங்கள் வருமாறு:

1. கோதுமை இந்நாட்டுக்குரிய விளைபொருள் அல்ல. நாம் விலை கொடுத்து வாங்கவேண்டிய இறக்குமதிப் பொருளாகவே கோதுமை எமக்கு என்றும் இருக்கும்.

2. உணவுச்சத்தைப்பொறுத்த அளவிலும் எமது சிறு தானிய வகையிலும் பார்க்க கோதுமை பலபடி கீழானதே.

3. சுலபத்தில் கிடைக்கின்ற காரணத்தினால் எம்நாடு சிந்திக்காது கோதுமையை இறக்குமதி செய்கிறது. மக்களும் கோதுமை உணவுக்கு மிக விரைவாகப் பழக்கப்பட்டு வருகிறார்கள்.

4. இந்நிலை தொடரின் இன்னும் 15, 20 வருடத்துக்குள் இலங்கையில் சிறுதானியச் செய்கையும் அவற்றைப் பதனிட்டுப் பாவிக்கும் வழக்கமும் அடியோடு அற்றுவிடும். கோதுமை மா இல்லாது வாழ முடியாத நிலைக்கு மக்கள் உள்ளாவார்கள்.

5. இதனால் எமது இன்றியமையாத உணவுப்பொருள் கோதுமையே என்றநிலை உருவாகி இக்கோதுமைக்காக நாம் பிறநாடுகளிடம் கையேந்தி நிற்கவேண்டிய நிரந்தர நிலைமை இடம்பெறுமல்லவா?

6. கோதுமையின்விலை அப்போது வேண்டுமெனக் கூட்டப்படின் எத்தனை வீண் நட்டத்துக்கும் கடனுக்கும் கஷ்டத்துக்குதி எம்நாடு உள்ளாகுமென்பதை இப்போதே சிந்திப்பது நலம். யுத்த நெருக்கடி ஏற்படின் இறக்குமதிக் கோதுமை கிடைப்பது நிச்சயமா? இவ்விதம் பொருளியலிலும் அரசியலிலும் எம்மை நாம் அடிமைப்படுத்துவது எதற்கு?

மேற்கூறிய அவலநிலை தவிர்க்கப்படக் கூடியதே. அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து தற்போது இலவசமாகவும் சொற்பவிலைக்கும் கடனுக்கும் கோதுமை கிடைக்கிறதென்பதற்காக இதனை அழியவிடுவது மடமையாகும். எமது மண்ணில் விளையும் பயிர்களோ எமக்கு நின்று உதவக்கூடியவை. இவ்விதம் பனையும், பலாவும் பெரும் செல்வங்கள். குரக்கன், வரகு, தினை, எள் ஆகியன உடலுக்கு உறுதி தரும் சிறு தானியங்கள். ஊரின் பசி போக்க வல்ல சிறந்த உணவு மரவள்ளி. இது 5, 10 பரப்புக்கென அல்லாது பிற நாடுகளில் 30, 100 ஏக்கருக்கென வைக்கப்பட்டுச் சீவல்செய்து வற்றலாக்கிப் பெரும் வருவாயைத் தருகின்றதாம்.

இங்கு இன்னொன்றையும் கவனிக்கவேண்டியுள்ளது. அதாவது எல்லா நிலமும் நெற் செய்கைக்கு உரியதல்ல. நெற் செய்கையால் மட்டும் நாடு தன்னிறைவு பெற்றுவிடாது. உலகின் மூன்றில் ஒரு பகுதிக்கு அரிசியைவிட வேறு பொருட்கள் தேவையே. இதற்குரிய உணவு வகைகள் இலங்கையில் கிடையாதா? கோதுமை தான் எமக்குக் கதியாக வேண்டுமா?

எனவே எம் நாடு முழுதும் பயனுறவேண்டின் எம் வருங்காலம் பிற நாட்டுக் கோதுமையை நம்பி வாழும் நிலையிலிருந்து விடுபடவேண்டின் அதற்குரிய திருப்பமும் புரட்சியும் தேவை. கோதுமை இறக்குமதி இப்போதிருந்து சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு ஈற்றில் ஒழிக்கப்படவேண்டும். இதில் அரசாங்கம் விழிப்புற்றுச் செயற்படவேண்டும். அத்துடன் விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஆய்வு கூடங்களும் எழுப்பப்படவேண்டும். கோதுமைப் பாணுக்குப் பதிலாக வேறு மா இனங்களைச் சேர்த்துப் பதனிடும் வகை முறைகள் ஆராயப்படல்வேண்டும். வருடமொன்றுக்கு 70,000 தொன் கோதுமையை அரைத்துப் பையில் அடைக்கும் அரசாங்க ஆலை ஒன்று இப்போது கொழும்புத் துறைமுகத்தில் இயங்குகிறது. இதுபோலச் சிறு தானியங்களையும் மரவள்ளிச் சீவல் போன்ற உணவு வகைகளையும் அரைத்துப் பதனிடும் முறைகளில் முதலீடு செய்து புதிய முன்னேற்றங்களை ஏற்படுத்தவேண்டும்.

இரண்டொரு மா வகைகள் சேர்த்துக் கலந்து விற்பனைக்கு வரும்போது, அவை மக்கள் விரும்பும் பண்டங்களாகலாம்.

நெற்பயிர் ஆராய்ச்சி போல சிறு தானிய ஆராய்ச்சி, இந்நாட்டில் இன்னும் கூடிய அளவில் இடம்பெறவேண்டும். விவசாயிகளுக்குப் போதிய ஊக்கமும், ஆக்கமும், உதவியும் கொடுக்கப்படவேண்டும்.

(5ம் பக்கம் பார்க்க)

## 'எம். வி.' நினைவு மண்டபம்

(யாழ்ப்பாணம்)

அமரர் எம். வி. சுப்பிரமணியம் ஞாபகார்த்த மண்டபம் ஒன்று வல்வை தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்திற்கு அருகில் அமைக்கப்படவுள்ளது.

லண்டனிலுள்ள உடுப்பிட்டி நலன்புரிச்சங்கத்தினால் நிறுவப்படவிருக்கும் இம்மண்டபத்தில் பாலர்பாடசாலை, தையல் வகுப்பு போன்றவை நடைபெறவுள்ளன.

## தேவாலயத்தில் சிரமதானம்

(நாவற்குழி)

நாவற்குழி சென். மேரி தேவாலய உற்சவம் தற்போது விமரிசையாக நடைபெற்றுவருகிறது.

இத்தேவாலயச் சூழலைத் துப்புரவுசெய்யும் பணி சிரமதான அடிப்படையில் நடைபெற்றது.

யுவதிகளும் இதில்பங்கேற்றி சிரமதானத்துக்கு செல்வி மேரி கிரேஸ் (ராஜேஸ்) தலைமைதாங்கி சிரமதானப் பணிகளைச் சிறப்புற மேற்கொண்டார்.

இத்தேவாலயத்தின் உற்சவ நிறைவுநாள் எதிர்வரும் புதன் கிழமையாகும். (107)

## பலதும் பத்தும்

### அவர்கள் வேகம்...!

மேற்குநாடுகளில் தொழில் நுட்பமும் சூழல் மாசடைதல் பிரச்சனையும் எவ்வாறு இணைந்து செயற்படுகின்றன?

ஒரு உதாரணம்: பாரிஸ் நகர வீதிகளில் ஏராளமான கார்கள்...! எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்? ஆயிரக் கணக்கிலா...? இல்லவே இல்லை.

தினசரி... 2.2. மில்லியன் கார்கள் வந்துபோகின்றனவாம்.

கார் நிறுத்துவதிலும் பெரிய பிரச்சனைகள்...! ஒவ்வொரு நிமிடத்திலும் சுமார் 60,000 கார்கள் சட்டவிரோதமாக நிறுத்தப்படுகின்றன.

கார்கள் வெளிவிடும் நச்சுவாயுக்கள்...? தொல்லைதான்; சூழல் மாசடைகின்றன; உடல் நலம் கெடுக்கின்றன.

இந்தப் பிரச்சனைகளை எவ்வாறு தீர்க்க முற்பட்டார்கள்? 1987ல் ஒரு திட்டம்— பாரிசிலே ஒரு சுரங்கப்பாதை— 3½ வருடத்திற்குள் கட்டி முடிக்க 2.4 மில்லியன் டொலர் செலவில் ஓர் திட்டம்.

இத்திட்டம் நிறைவேறியதும் சில நிமிட நேரத்திலேயே பாரிசைக் கடந்துவிடலாமாம். சுரங்கப்பாதைக்குட் செல்லவும் வெளியேறவும் 12 இடங்களில் வழிகள்.

இதனால் கால்வாசிக் கார்களின் தொல்லை நீங்கும்; நச்சு வாயுக்களின் தொல்லையும் குறையும்...!

இங்கே...? சுரங்கப்பாதைகள் வேண்டாம்...! உள்ள தெருக்களிலேயே, 'குளங்களை' நிரப்பி, அகலத்தைக் கூட்டி...!

வாணி

# "உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைந்து போராட வேண்டும்"

[நெல்லியடி]

''காலத்திற்குக் காலம் வரலாறு பலமுக்கிய கடமைகளை ஆற்றித்தரும் பொறுப்பை மக்களிடம் விடுக்கின்றது. அந்தவகையில் தமிழ்பேசும் மக்கள் மத்தியிலும் ஒருவரலாற்றுக்கடமை எழுந்திருக்கின்றது. அந்தக்கடமை எமது இனத்தின் உரிமைகளை வென்றெடுக்கும் முக்கிய கடமையாகும். இதனை நிறைவேற்ற நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட முன்வரவேண்டும்''

இவ்வாறு நாகர்கோவில் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கப்டன் வீமன், லெப்ரினன் பேர்ணுட் ஆகியோரின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் வடமராட்சி இணைப்பாளர் திரு. குணம் குறிப்பிட்டார்.

திரு. கே. சிவகாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. குணம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: கடந்தகால எமது போராட்ட வெற்றிக்குக் காரணமானவர்கள் வீரத்தியாகிகளும், பொதுமக்களுமேயாகும். எனவே அனைத்துப் பொதுமக்களும் தொடர்ந்தும் எமக்கு ஒத்துழைப்புநல்க முன்வரவேண்டும்.

வடமராட்சி மக்கள்தொடர்பாளர் திரு. ஸ்ரனிலஸ் மாஸ்டர் பேசுகையில்கூறியதாவது; எமது பூமி கையாலாகாதவர்களால் நிரம்பிக்கிடக்கவில்லை. மகத்தான தியாகங்களை ஆற்றவல்ல தியாகிகளால் நிரம்பிக்கிடக்கின்றது. எனவே அனைவரும் காலத்தின் தேவையை உணர்ந்து கடமையினை நிறைவேற்ற தயாராகவேண்டும்.

வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் செல்வி லூசியா பேசுகையில்: எமது உரிமைப்போராட்டத்தில் பல தடைக்கற்களைத் தாண்டி வந்துள்ளோம் என்றும், அந்த தடைக் கற்களை அகற்றிய வீரத்தியாகிகள் என்றும் ஆராதனைக்குரியவர்கள் என்றும் அவர்களின் இலட்சியங்களை வென்றெடுக்க அனைவரும் முன்வரவேண்டும் என்றும் கூறினுர்.

இக்கூட்டத்தில் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு.சூசை வடமராட்சி மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. அரசண்ணு, திருவாளர்கள் க. ஆனந்தமூர்த்தி, வே. கோபாலபிள்ளை, எஸ். தர்மகுலசிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்திஞர்கள். செல்வி ந. நாகேஸ்வரி நன்றிகூறிஞர். [55]

## சாமை, தினை, வரகு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு அரசாங்க உணவுக் கொள்கையில் புதியதொரு திருப்பம் தேவை. அரசியல் தலைவர்கள் இதில் விழிப்புற வேண்டும். நாட்டில் ஈடுபாடு கொண்டோர் இதுபற்றிச் சிந்திக்கவேண்டும். பொதுமக்கள் ஒவ்வொருவரும் கோதுமை இறக்குமதியால் வரும் கேட்டையும், எம் சொந்த நாட்டின் விவசாயப் பெருக்கத்தால் வரும் வாழ்வையும் விளக்க வேண்டும்.

## புதிய ஆளுநர்

[புதுடில்லி]

பஞ்சாப் மாநில அரசின் புதிய ஆளுநராக பாராளுமன்ற மேல்சபை உறுப்பினர் திரு. பிரேந்திர சர்மா நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## இணக்கசபை தெரிவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, இளவாலை பிரதேசத்திற்கான இணக்க சபை உறுப்பினர் தெரிவு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பண்டத்தரிப்பு வட்டப் பொறுப்பாளர் திரு. சிவா இதில் கலந்துகொண்டு இணக்கசபை பற்றிய ஒழுங்கு விதிகளையும், சட்டதிட்டங்களையும் அனைவருக்கும் விளக்கிக் கூறினுர். பத்துப்பேரைக் கொண்ட இணக்கசபை இதில் தெரிவு செய்யப்பட்டது. (72)

## ஆரம்பப் பாடசாலை அமைக்க கோரிக்கை

(நாவற்குழி)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் சிறுர்களின் கல்வி வசதி கருதி இப்பகுதியில் ஒரு ஆரம்பப்பாடசாலை ஒன்றை அமைத்துத் தரும்படி கோரும் மகஜர் ஒன்று, பெண்கள் குடியேற்றத்திட்ட வாசிகளினுல் யாழ். அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: ''இப்பகுதியிலுள்ள சிறுர்கள் தமது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக வெகுதூரம் நடந்து செல்லவேண்டி உள்ளதால் இப்பகுதிச் சிறுர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பாரிய குறையை நிவர்த்திசெய்யும் பொருட்டு, இப்பகுதிக்கு 3ம் வகுப்புவரையில் படிக்கக்கூடிய ஒரு ஆரம்பப் பாடசாலை அமைத்துத் தந்து எமது சிறுர்களின் கல்வி வசதியை ஏற்படுத்தித் தாருங்கள்'' (107)

# "சாரணியத்தின் வளர்ச்சிக்கு சேவையாற்றியவர்"

(யாழ்ப்பாணம்)

''யாழ்.மாவட்ட சாரணியத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டுச் சேவைக்கு இலக்கணம் வகுத்த அமரர் வரதலிங்கம் செய்த சேவைகள் மகத்தானவையாகும்'' என்று யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளராக இருந்து அண்மையில் விபத்தில் காலமான செ. வரதலிங்கத்தின் நினைவு தினத்தையொட்டி யாழ். திரிசாரணர் குழு நல்லூர்ப் பிரிவின் சார்பில் திருவாளர்கள் ஆர். ஆர். ராஜ்குமார், எஸ். தேவரஞ்சன் ஆகியோர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளனர். இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''வாழ்க்கையிலும், சேவையிலும் சாரண விதிகளையும், அதன் தத்துவங்களையும் கடைப்பிடித்தவர் அமரர் வரதலிங்கம். சாரணியத்தின் ஒரு சாரண ஆசிரியராக இருந்து பின்னர் மாவட்ட சாரணர் தலைவர் என்ற பதவியுடன் தீவுப்பகுதிக்கு சாரணியத்தை உருவாக்கிய பெருமையும் அவரையே சேரும். அதன் உதவி மாவட்ட ஆணையாளராக அவர் செய்த சேவைகள் மறக்கமுடியாதவை. அவர் பல்வேறுபட்ட சமூக சேவை நிறுவனங்களில் சேவையை மேற்கொண்டதன் மூலம் சாரணியத்திற்கு மரியாதையும் கீர்த்தியும் ஏற்படுத்திஞர்.

திரிசாரணர் குழுப் பிரிவினரில் அக்கறை கொண்ட சாரணர் ஆணையாளரை இழந்து தவிக்கும் நாம் எல்லோரும் சாரணியத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை ஆற்றுவதன் மூலம் அவரது ஆன்மா சாந்தியடைய வழிவகுப்போம்.''

## வேலணை மாணவர்கள் கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

வேலணை நடராஜா வித்தியாலய மாணவர்கள் நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டில் ல்விச்சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டார்கள்.

சுமார் நூறு மாணவர்களையும், ஆசிரியர்களையும் உள்ளடக்கிய இந்தச் சுற்றுலாக் குழுவினர் 'ஈழநாடு' அலுவலகத்திற்கும் வருகை தந்தார்கள்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, கீரிமலை புனித தலம். அச்சுவேலி கைத் தொழில் பேட்டை ஆகியவை உட்பட பல இடங்களை இந்த மாணவர்கள் பார்வையிட்டனர்.

# "மரபுவழி கலைவடிவங்களை வளர்த்தெடுக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''மனிதன் சிந்தனையில் உதித்த கோலங்கள் கலைமோகத்தால் கைவினைச் சிறப்பால் அழகுற மிளிர்ந்து சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் மிளிர்கின்றன. இவைகள் கலைஞனுல் உருவாக்கப்பட்ட உணர்வுகளின் பொக்கிசங்கள், என்றும் உயிருடன் விளங்கும் உன்னத படைப்புக்கள். இத்தகைய கலைகள் சிறப்புடன் என்றும் திகழ இதனை ஆக்குகின்ற கலைஞர்களுக்கு நாம் ஆக்கமும் ஊக்மும் கொடுத்து மேலும் மேலும் அவர்களது திறமைகளை வளர்த்தெடுக்க வேண்டும்.''

இவ்வாறு யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுதந்தரலிங்கம் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் கலாகேசரி ஆ. தம்பித்துரையின் ஐம்பத்தெட்டாவது பிறந்த நாளை முன்னிட்டு அவரால் எழுப்பட்ட 'பண்பாட்டின் மூன்றுகோலங்கள்' என்ற நூலை வெளியிட்டு வைத்து உறையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் பேசுகையில் கூறியதாவது:

''மரபுவழி வந்த நமது வடிவங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். எமது சிற்பங்கள் ஓவியங்கள் என்பன வெளிநாட்டவர்களால் நன்கு மதிக்படுகின்றன. வெளிநாட்டவர்கள் நம்முடைய கலைத்திறமைகளை மதிக்கும் அளவிற்கு நாம் மதிப்பதில்லை. கலாகேசரி ஒரு பிறவிக் கலைஞன். சிற்பக்கலை அவரது குடும்பத்தின் மரபுவழிவந்த கலை, படித்து உத்தியோகம் பார்க்கும் ஒருவர் தனது வாழ்க்கையில் கணிசமான அளவிற்கு இக்கலைக்காக தன் உழைப்பாற்றலை, நேரத்தைச் செலவிடுகிறுர் என்றுல் நாம் கட்டாயமாக அந்தக் கலைஞனைப் பாராட்டியே ஆக வேண்டும். போஸ்ரர்கள் ஒட்டி விளம்பரப்படுத்தும் அளவிற்கு நமது கல்வித்துறை இறங்கி வந்துவிட்ட இக்காலகட்டத்தில் உத்தியோகம் கிடைத்த பிறகும் தன் மரபுவழிவந்த கலையைக் கைபபிடித்து தனக்கெனப் பல மாணுக்கர்களை உருவாக்கியவர்கள் கலாகேசரி'' என்ருர்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

# "கவிஞரின் சிறுவர் நூல்கள் சர்வதேச தரம் பெறுகிறது"

(யாழ்ப்பாணம்)

''கவிஞர் சத்தியசீலனின் இருபத்தொரு பிரசுரங்களைக் கண்காட்சியில் கண்டு மகிழ்ந்தேன். மலர்கள் இரண்டைக் கழித்து மீதமுள்ள பத்தொன்பது புத்தகங்களில் பதினேழு, பலவகையான சிறுவர் பாடல் நூல்களாகவேயுள்ளன. இவற்றைப் பொறுத்தவரை சர்வதேச சிறுவர் நூல்களின் தரத்துக்கு நிகராகவுள்ளன. 'மதுர கவிதைகள்' என்ற தொகுதியில் இடம்பெற்ற கவிஞரின் முதற்பரிசுப் பாடல்களில் ஒன்று பிரபல இருமொழி நிபுணர் பீரிஸ் என்பவரால் சிங்கள மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு, நாடகமாகத் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டு வருவதுடன், கவிஞரின் பரிசுபெற்ற இன்னெரு நூலான 'கப்பல்' சிறுவர் நூலிலிருந்து 'அணில்' முதலிய ஆறு பாடல்கள் சிங்களப் பாடப் புத்தகங்களில் சேர்க்கப்படுவதற்காக அந்த அறிஞரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை எமது கோட்டத்துக்கு மட்டுமல்ல; நமது தமிழ்நாட்டுக்குமே பெருமையாகும்''.

இவ்வாறு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கவிஞர் சத்தியசீலனின் 'வெள்ளிவிழா எழுத்து விழா'வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'சத்தியசீலனின் புத்தகக் கண்காட்சி'யைத் திறந்துவைத்துப் பேசும்பொழுது மருதனுமடம் கோட்டம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரம் குறப்பிட்டார்.

இந்த வெள்ளிவிழா, ஒரு பள்ளி விழாவாக அமைந்திருப்பது கவிஞரின் ஆசிரியத்துவத்துக்குக் கிடைத்த வெற்றி என்றும், எத்தனையோ அறிஞர்கள் இருக்க கல்லூரி அதிபரே கவிஞருக்குப் பொன்னுடை போர்த்தியது மிகவும் பொருத்தமானது என்றும் கவிஞர் 'நவாலியூர் நாயகி' திருமதி மேரி நாயகி மரியதாசன் குறிப்பிட்டார்.

## கிளிநொச்சியில் சஞ்சிகை வெளியீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் 'சமூக விஞ்ஞானச் சுடர்' சஞ்சிகை வெளியீட்டுவிழா அண்மையில்நடைபெற்றது.

திரு. என். சோதிநாதன் தலைமையில் மத்திய மகா வித்தியாலய கலையரங்கில் இந்திய இராணுவத்தால் கொலைசெய்யப்பட்ட போராளி வர்ணனின் (கலைஜீவன்) தந்தை மு. ஜீவரட்ணம் 'சமூக விஞ்ஞானச் சுடர்' சஞ்சிகையின் முதற் பிரதியைப் பெற்று வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார்.

வரவேற்புரையை திரு. விவேக்கும், வெளியீட்டுரையை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலை கலாசார வெளிக்கள உத்தியோகத்தர் பொ. விவேகானந்தனும் நிகழ்த்தினர்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி, திருமதி சித்திரலேகா மௌனகுரு, அரசஅதிபர் க.மாணிக்கவாசகர், ஜனுப் ப.ச. மொகைதீன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

அறிமுக உரையை திரு. சிவபாலனும், திறனுய்வுரையை முத்துசிவலிங்கம், திருஞானம், விந்தன் ஆகியோர் நிகழ்த்த, 'சமூக விஞ்ஞானச்சுடர்' ஆசிரியர் அ. கௌரிகாந்தன் பதிலுரையாற்றினுர். (83)

## உதவிப் பணம் மீளாய்வு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள்பற்றியமீளாய்வு கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுபவர்கள் தத்தமது பிரிவுக் கிராம சேவை அலுவலருடன் தொடர்பு கொண்டு தமது விபரங்களைத் தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

# "கல்வியும், சமயநெறியும் கிராமத்தின் இரு விழிகள்"

(தென்மராட்சி)

''கல்வியும் சமய நெறியும் ஒரு கிராமத்தின் இருவிழிகள். அவை இரண்டும் இந்த பாடசாலையில் பரிணமித்துக்கொண்டிருக்கின்றன. மாணவரின் ஒழுங்கு, கட்டுப்பாடு, பெற்ரோரின் அக்கறை அனைத்தும் இவ்வித்தியாலயத்தை உயர் பீடத்தில் ஏற்றிவைக்கும்அணிகலன்களாக விளங்குவதையிட்டு பெருமையடைகின்றேன்.''

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில் பேருரை நிகழ்த்திய வடமாநில உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா இவ்வாறு கூறினுர்.

வித்தியாலய அதிபர் திரு. ரி. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் திரு. தியாகராசா தொடர்ந்து பேசும்போது;

''சமய நெறி பாடசாலைகளில் மிகவும் இன்றியமையாதது. சமய நெறியை அநுஷ்டிககும்மாணவன் ஒழுக்கத்தில் தவறமாட்டான். வடபகுதியில் சில பாடசாலைகளின் அருகில் கோவில்கள் உண்டு. காலையில் பாடசாலைகள் ஆரம்பமாகும்போது அருகிலுள்ள கோவில்களுக்குச் சென்று வணங்குவதுண்டு. இங்கே வேம்படி விநாயகர் என எழுந்தருளியுள்ள விநாயகரைத்தினமும் வணங்கி மாணவர் பயில ஆரம்பிப்பதுகொடுத்துவைத்த மகா புண்ணியச் செயலாகும்'' என்ருர்.

தென்மராட்சிக் கல்வி அதிகாரியும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு. ச. தனஞ்செயன் பேசும்போது;

''கடமையுணர்ச்சி, கட்டுப்பாடு, நிர்வாகச் சிறப்பு முதலான சகல அம்சங்களும் பொலிந்த வித்தியாலயமாக இது அமைந்திருப்பது எனக்கு உற்சாகத்தை ஊட்டுகின்றது. வித்தியாசாலைகள் அனைத்தும் தமது கருமங்களைச் சரிவர நடத்துவதால் எமது பணிக்கு அவை மெருகூட்டுகின்றன. இவ்வித்தியாலயத்தின் கடமைகள் உதவிஆசிரியர்களின்தரத் திற்கமைய பகிர்ந்தளித்திருப்பது பாடசாலைப் பணியைத் திருப்தியாக நிறைவேற்ற வழி வகுக்கின்றது. மக்களின்ஆர்வமும் இங்குள்ள கோயில்அமைப்பும் வழிபாடும் என்னையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது'' என்ருர்.

விஞ்ஞானக் கல்வி அதிகாரி திருமதி பு. கணேசலிங்கம் பரிசில் வழங்கினுர்.

வித்தியாலய அதிபர் திரு. தா. இராமலிங்கம் வித்தியாலய அறிக்கையைச் சமர்ப்பித்தார். [81]

### "ஆங்கில அறிவின்மையால்

# உயர்கல்வி 'பெறும் மாணவர் பெரும் சிரமப்படுகின்றார்கள்"

## ஆங்கில தினவிழாவில் கருத்து

(பருத்தித்துறை)

''இன்றைய மாணவர்கள் ஆங்கிலக்கல்வியில் போதிய அறிவினைப்பெற்றுக் கொள்ளாமையினாலேயே பல்வேறு துறைகளிலும் அறிவு, ஆற்றல் களைப்பெற்றுக் கொள்வதற்கு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.'' இவ்வாறு வட- இந்துமகளிர் கல்லூரியில்நடைபெற்ற ஆங்கிலதின விழாவிலே பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். கல்வித்திணைக்கள ஆங்கிலக் கல்வியதிகாரி திரு. ரீ. தியாகராஜா குறிட்டார்.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு அதிபர் திருமதி எல். குமாரசாமி தலைமைதாங்கினார்.

ஆங்கிலக்கல்வியதிகாரி திரு. தியாகராஜா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''மாணவர்கள் ஆங்கிலக் கல்வியில் அறிவு, இல்லாமையினால் மாணவர்கள் உயர்கல்விகளைப் பெற்றுக்கொள்ளும் போதும் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர்: சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் பெருந்தொகையான அறிவுநூல்கள் இருப்பதனால் ஆங்கிலத்தில் போதிய அறிவுள்ளவர்களே அந்நூல்களை வாசித்து தமதுஅறிவு ஆற்றல்களை விருத்திசெய்யமுடிகின்றது.''

'பாடசாலைகளில் ஆங்கிலக் கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். மாணவர்களின் ஆங்கிலக் கல்வியறிவை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் கவனமெடுக்கவேண்டும். பாடசாலைகளில் ஆங்கிலத்தினவிழாக்கள் நடாத்தப்படவேண்டும்.

இவ்விழாவில் ஆங்கில நாடகங்கள் அபிநயப்பாடல்கள் வினாடி வினாப்போட்டிகள், விவாதம் என்பனவும் இடம்பெற்றன.

வடமராட்சி ஆங்கிலக்கல்வி ஆலோசகர் திருமதி ஜெயபூபதி குலசிங்கம் சாவகச்சேரி, வேலணை, புங்குடுதீவு ஆங்கில கல்வி ஆலோசகர் திரு. எஸ். சுந்தரேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர்.

பாடசாலையில் நடைபெற்ற ஆங்கில போட்டிகளுக்கான சான்றிதழ்களை யாழ், கல்வித் திணைக்கள ஆங்கிலக்கல்வியதிகாரி திரு. தியாகராஜா வழங்கினார். (52)

### யாழ். - வெற்றிலைக்கேணி

# பஸ் சேவை இடைநிறுத்தம் பிரயாணிகள் பெரும்கஷ்டம்

(மருதங்கேணி)

யாழ். — வெற்றிலைக்கேணி அதிகாலை பஸ் சேவை கடந்த சில தினங்களாக நடத்தப்படாததினால் அப்பகுதி பிரயாணிகள் பெரும் போக்குவரத்துக் கஷ்டத்தினை எதிர்நோக்கியுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து முதல் நாள் இரவு வெற்றிலைக்கேணிக்கு வந்து, அதிகாலை 6 மணிக்கு வெற்றிலைக்கேணியிலிருந்து புறப்படும்சேவையே சில தினங்களாக நடத்தப்படவில்லை.

இதனால் முள்ளியான், வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, மருதங்கேணி, தாளையடி ஆகிய இடங்களில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள், மாணவர்கள், ஏனைய பிரயாணிகள் ஆகியோருட்பட பலர் போக்குவரத்துக் கஷ்டத்தினை எதிர்நோக்கியுள்ளனர். (53)

## உழைக்கும் மகளிர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனக் கருத்தரங்கு வல்வெட்டி சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிலையத் தலைவர் திரு. கோபால் துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மேற்படி நிறுவனத்தின் செயலாளர் திருமதி பவானி தங்கத்துரை மகளிரிடம் சுயதொழிலை ஊக்குவித்தல், சேமிப்பு, சுய முகாமைத்துவம் ஆகிய தலைப்புக்களில் விரிவுரையாற்றினார்.

# "பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வுதான் எமது லட்சியம்"

### - கருணா

(மட்டக்களப்பு)

''எமக்குப் போராட்டம் முக்கியமானதொன்றல்ல. தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வுதான் எமது லட்சியம். அண்மையில் அமைச்சர் ஜனுப் ஹமீத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போதும் இதை நாம் வலியுறுத்தியுள்ளோம். இலங்கை அரசும் இதை ஏற்றுக்கொண்டுள்ளது.''

இவ்வாறு மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடந்த இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தளபதி கருணா கூறினார்.

இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அலுவலர் திரு. வி பேரின்பநாதன் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசியதாவது: தமிழ் மக்களின் பாதுகாப்புக்கருதியே நாம் பாதுகாப்பை பலப்படுத்துகிறோம்.

இன்றுநாட்டில் அமைதி ஏற்பட்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இதற்கு இறந்த போராளிகளின் தியாகமே காரணம்.

அவர்கள் இன்று இருந்திருந்தால் மிக்க மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். அப்போது நாமும் இருமடங்கு மகிழ்ச்சியடைந்திருப்போம்,

மாவட்ட ஆணையாளர் திரு. இ. யோகநாதன் கூறியதாவது:-

விளையாட்டு ஒரு மனிதனுக்கு இன்றியமையததொன்றாகும். அது உடலைமட்டுமன்றி உள்ளத்தையும் வளர்க்கிறது விளையாட்டில் ஒருவர் தொடர்ந்து ஈடுபடவேண்டும். அப்போதுதான் முழுமையான பலனைப் பெறலாம். இன்று என்னைப்போன்ற பலர் தளர்நடையுடன் காணப்படுகின்றனர். அவர்கள் விளையாட்டைத் தொடராததே காரணமாகும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் புனர் வாழ்வுப் பொறுப்பாளர் டேவிற், மாநகர சபை ஆணையாளர் திரு. கே. கார்த்திகேசு ஆகியோரும் கலந்துகொண்டனர். (121)

## உற்சவம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை தும்பளப்பாய் புனித. அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 13-ம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பூசைகளைத் தொடர்ந்து அன்னதானம், கலை நிகழ்ச்சி ஆகியவற்றையும் நடாத்துவது என்று ஆலய பரிபாலன சபை தீர்மானித்துள்ளது. (72)

## வருடாந்த மஹோற்சவம்

(வேலணை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்திணைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்மன் வருடாந்த மஹோற்சவம் கடந்த 8ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்றுவருகின்றன.

இம்மாதம் 16ம் திகதி சனிக்கிழமை காலை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் 18ம் திகதி திங்கட்கிழமை சண்டேஸ்வரிஉற்சவமும்நடைபெறவுள்ளன. (75)

## தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம்

(பருத்தித்துறை)

வடக்கு கிழக்குப் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஒன்று ஜூலை 1ந் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. கட்டடத்தில் நடைபெறவுள்ள இத்தொழிற்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சகல சமூக சேவைகள் உத்தியோகத்தர்களையும் கலந்துகொள்ளுமாறு அமைப்புக் குழுத் தலைவர் திரு.த.கிருபாகரன் கேட்டுள்ளார். (52)

### வேலணையில்

# சிறப்பான சனசமூக நிலையத்திற்கு 'சிறப்புவிருது'

(வேலணை)

வேலணை பிரதேச சபை எல்லைக்குள் இருக்கின்ற சனசமூக நிலையங்களுள் மிகத் திறமாக இயங்கும் சனசமூக நிலையம் ஒன்றிற்குச் ''சிறப்பு விருது'' வழங்குவதற்கான ஏற்பாடுகளை வேலணை பிரதேச சபையின் விசேட ஆணையாளர் திரு. வே. கந்தசாமி செய்துள்ளார்.

வேலணைப் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய கிராமப் பகுதிகளிலுள்ள சனசமூக நிலையங்கள் எல்லாவற்றுக்கும் அதன் செயல் திறன்களைக் கருத்தில் கொண்டே இவ்விருதை வழங்க அவர் எண்ணியுள்ளார்.

விசேட ஆணையாளர் திரு. வே. கந்தசாமி ஒவ்வொரு சனசமூக நிலையங்களுக்கும் நேரடியாக விஜயம் செய்து அவற்றின் செயற்பாடுகளை அறியவுள்ளதாகவும், இந்த நேரடிவிஜயத்தின்போது இயங்காமலிருக்கின்ற சனசமூக நிலையங்களை இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. கந்தசாமி தெரிவித்தார். (75)

# ஓய்வூதிய திணைக்களப் பணி பன்முகப்படுத்தப்படும்!

(கொழும்பு)

ஓய்வூதியத் திணைக்களப் பணிகள் பன்முகப்படுத்தப்படஉள்ளது.

அந்தந்தப் பகுதிகளில் ஓய்வூதியம் பெறுவோர், மாவட்ட அலுவலகங்களில் இருந்து கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இது வசதியாக இருக்கும் என்று பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

நாடு முழுவதும் 2 லட்சத்து 25 ஆயிரம் பேர் ஒய்வூதியம் பெறுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் 18 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் ஓய்வூதியம் பெற்றுவருவதினால் ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது.

ஓய்வூதியக் கொடுப்பனவிற்காக அரசாங்கம் தற்போது 600 கோடி ரூபாவை வருடாந்தம் செலவிட்டுவருகிறது. (து)

## இராசி பலன்

**11 - 06 - 1990**

**திங்கட்கிழமை**

மேடம்: தொழில் சிறப்பு, அற்பர் நேசம், உதவிகள் கிடைத்தல்.

இடபம்: தொழில் இடத்தில் எதிர்ப்பு, பணக் கஷ்டம், நிதானமின்மை.

மிதுனம்: அயலவர் உதவி, அலைச்சல், ஆடம்பரம்.

கடகம்: தர்க்கம், கௌரவம், தலையிடி.

சிங்கம்! யோசனை, அயலவர் தொல்லை, மனச்சோர்வு.

கன்னி: தைரியம், வீண் செலவு, தூரத்துச் செய்தி.

துலாம்; பண வரவு, சிந்தனை, பெரியோர் உதவி.

விருச்சிகம்: பிடிவாதம், சகோதர உதவி, பிரயாணம்.

தனுசு: நற்சிந்தனை, தேக பீடை, பணவரவு.

மகரம்: அரசியல் தர்க்கம், புதிய யோசனை, தூரத்துச் செய்தி.

கும்பம்: சத்துரு தொல்லை, பொருட் செலவு, ஆடம்பரம்.

மீனம்: செல்வாக்கு, உற்சாகம், பண வரவு.

இ.மகாதேவா

# "பயிற்சிபெறும் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் உத்தேசம் இல்லை"

## மாகாண சபை செயலாளர் தகவல்

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் முகாமைத்துவப் பயிற்சி அளிக்கப்படுபவர்கள் வடகிழக்கு மாகாண நிருவாக சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள் என்று மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ். கணேசநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் பத்திரிகையாளர் மத்தியில்பேசுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

திரு. எஸ். கணேசநாதன் பத்திரிகையாளர் மத்தியில் மேலும் கூறியதாவது:

பட்டதாரிகளுக்கு பயிற்சி மட்டுமே அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கு தொழில் வழங்கும் உத்தேசம் இப்போது இல்லை.

''வடகிழக்கு மாகாணத்திலுள்ள இலங்கை நிருவாக சேவை வெற்றிடங்களுச்கு 100 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர் இதற்கான நிருவாக சேவைப் போட்டிப்பரீட்சை எதிர்வரும் 23ம் திகதி நடைபெறவுள்ளது.''

''முகாமைத்துவப் பயிற்சி பெறும் பட்டதாரிகள் இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தால் நிருவாக சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்,

''இப்போது மாகாணசபை புதிதாக நியமனங்கள் எதையும் செய்யவில்லை. கடந்த மார்ச் 1ம் தேதிக்கு பின் நியமனம் பெற்றோர் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.''

''இலங்கை அரசுடனும் ஆளுநருடனும் சுமுகமான நிலை இருந்து வருகிறது விடுதலைப்புலிகளுக்கும் எமக்குமிடையே நல்லுறவும் நிலவுகிறது. இதனால் மாகாண சபையின் நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றார். (121)

## வீடுகள் அமைக்கும் பணி

(உடுவில்)

கடந்த வருடங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாகத் தமது சொந்த வீடுகளை இழந்தவர்களுக்கும், வீடு இல்லாத வறிய மக்களுக்கும் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணியில் யாழ்ப்பாணம் தென்னிந்தியத் திருச்சபை ஆதீனத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வீடமைப்புப் பணியினை சத்தியபுரம் திருச்சபை ஊழியர் ஏ. ஆர். தம்பியப்பா மேற்பார்வையிட்டு வருகின்றார்.

உடுவில் தெற்கு, சத்தியபுரம், உடுவில் மல்வம், புதுமடம், இணுவில் ஆகிய கிராமங்களில் சுமார் 50 வீடுகளை அமைக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, கட்டட வேலைகள் நடைபெற்றுவருகின்றன, (109)

# உலககிண்ண உதைபந்தாட்டம்: இத்தாலி வெற்றி! ரஷ்யா தோல்வி!

இத்தாலியில் நேற்று முன் தினம் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில், இத்தாலி, ருமேனியா, கொலம்பியா ஆகிய நாடுகள்வெற்றிபெற்றுள்ளன.

## இத்தாலி வெற்றி

இத்தாலிக்கும் ஆஸ்திரியாவுக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் இத்தாலி ஈற்றில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில்இருகோஷ்டிகளும் இடைவேளைவரைகோல்கள் எதுவும் போடாத நிலையில் இருந்தன. இடைவேளையின் பின்னர் இத்தாலிக் கோஷ்டியின் முன்னணி வீரர் சல்வட்டோ செனுப்பிமிகசாதுரியமாக 78-வது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டதால் இத்தாலி ஆட்ட முடிவில் 1—0 கோலால் வெற்றிபெற்றது.

## ருமேனியா வெற்றி

ரஷ்யாவுக்கும் ருமேனியாவுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில்ருமேனியாவெற்றி பெற்றதுஉலகஉதைபந்தாட்ட ரசிகர்களுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது!

மிகவும் பலம்வாய்ந்த கோஷ்டிஎன்று கணிக்கப்பட்ட ரஷ்யா, இப்போட்டியில் எதிர்பார்த்தஅளவுக்கு சிறப்பாக விளையாடாததால் ருமேனியா ஆட்டத் தொடக்கத்திலேயே முதலாவது கோலைப் போட்டு முன்னணி வகித்தது.

இடைவேளையின் பின் ருமேனியா 'பெனுல்டி' மூலம் மேலும் ஒரு கோலைப் போட்டது. இக்கோலை முன்னணி வீரர் மரடசெக்கா அடித்தார். ஆட்ட முடிவில் ருமேனியா 2—0 கோல்களால் வெற்றி பெற்றது.

**நமது விளையாட்டு நிருபர் 'தேவா'**

## கொலம்பியா வெற்றி

கொலம்பியாவுக்கும் ஐக்கிய அரபுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் கொலம்பியா வெற்றிபெற்றது.

இடைவேளை வரை இரு கோஷ்டிகளும் கோல்கள் ஏதும் போடாத நிலையிலேயே இருந்தன. இடைவேளையின் பின் கொலம்பியா கோஷ்டியின் முன்னணிவீரர்களின் சாதுரியமான பந்து மாற்றத்தினுல் இவர்கள் இரண்டு கோல்களை அடுத்தடுத்துப்போட்டுவெற்றி பெற்றனர்.

## கமரூன் வெற்றி

இத்தாலியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான 14-வது உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டியின் தொடக்க ஆட்டத்தில் தற்போதைய உலக சாம்பியனுன ஆர்ஜன்ரீனுவை ஆபிரிக்க கண்டத்தின் கமரூன் நாடு வெற்றி பெற்றது; உலக உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது!

ஆர்ஜன்ரீனுவின் 60 ஆண்டு உலக உதைபந்தாட்ட வரலாற்றில் இத்தோல்வி அந்த நாட்டுக்கு ஏற்பட்ட பெரும் ஏமாற்றம் என்று வர்ணிக்கப்படுகின்றது.

ஆர்ஜன்ரீனு இப்போட்டியில் இலகுவில் வெற்றிபெறக்கூடும் என ரசிகர்கள் எதிர்பார்த்த போது அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடிப்பது போன்று கமரூன் கோஷ்டியின்முன்னணி வீரர் ஓமன் 66நிமிடத்தில் தலையால் அடித்து ஒரு கோலைப் போட்டார். பின்னர் மிகுதியாக இருந்த 24 நிமிடங்களிலும் ஆர்ஜன்ரீனு வீரர்களின் பலத்த முன்னேற்றத்தை கமரூன் வீரர்கள் முறியடித்து வெற்றி வாகை சூடியதுபெரும் பாராட்டுதற்குரியது.

## 20 பேர் கைது

கமரூன் ரசிகர்கள் தாம் பெற்ற இம்மாபெரும் வெற்றியை அன்று இரவு முழுவதும் ஆட்டத்திலும் பாட்டிலும் களித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மிலான் நகரில் கமரூன்ஆதரவாளர்கள் தமது வெற்றியை ஒரு ஹோட்டலில் கொண்டாடிக்கொண்டிருக்கும் போது, அங்கு வந்த இங்கிலாந்துஆதரவாளர்களுக்கும் இவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் 20 இங்கிலாந்து ஆதரவாளர்களை இத்தாலியப் பொலிஸார் கைதுசெய்து காவலில் வைத்தனர்.

## இன்றைய ஆட்டங்கள்

இன்று நடைபெறும் ஆட்டங்களில் இங்கிலாந்தை எதிர்த்து அயர்லாந்தும்; கோஷ்டாரிக்காவை எதிர்த்து ஸ்கொட்லாந்தும் மோதுகின்றன. (வி)

---

# நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாஜப் புனரமைப்புக் கூட்டம் சுன்னுகம் பொது நூல் நிலையத்தில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. செ.தவநாயகம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. பொ. நடனசிகாமணி (குப்பிளான் விக்கினேஸ்வரா ச. ச. நிலையம்), துணைத் தலைவர்கள்: க. பொ. கந்தசாமி [இணுவில் அண்ணு ச. ச. நிலையம்], இ. சிற்றம்பலம் ஏழாலை பொதுப்பணி மன்றம்] செயலாளர்: வீ. விமலாம்பிகைபாகன் [கோட்டைக்காடு ச. ச. நிலையம்], துணைச் செயலாளர்: க. நாகராசா [மயிலங்காடு ஸ்ரீ முருகன் ச. ச. நிலையம்], பொருளாளர்; செல்வி சிவராஜசோதி சிவசம்பு (உடுவில் சச்சிதானந்த மகளிர் மன்றம்),

செயற் குழு உறுப்பினர்களாக நால்வர் தெரிவுசெய்யப்பட்டனர்.

°° °°

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் காந்திருபன் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: து. சிறீமோகனராஜா, உப தலைவர்: சபா செல்வராஜா, செயலாளர்: செ. சந்திரகாந்தன், உப செயலாளர்: ச. வசந்தா, பொருளாளர்: இ. குணேஸ்வரன், உப பொருளாளர்: பா. பிரபாகரன், பரிசோதகர்: க. நித்தியகுமார், விளையாட்டுப் பகுதி: சி. சிவலிங்கநாதன், திருமதி பவானி மலர், கல்விப் பகுதி; பா. உமா, சுகாதாரப் பகுதி: வை. சர்வநாயகி, கலாசாரப் பகுதி: செ. கிருஷ்ணகுலம். ஐந்து பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0

(நாவற்குழி)

கைதடி – நுணுவில் தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் அதிபர் க. இளையதம்பி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகள்:-

தலைவர்: க. இளையதம்பி, செயலாளர்; பொ.கந்தையா, உப செயலாளர்: க. விநாயகமூர்த்தி, நிதிப்பொறுப்பாளர்: திருமதி க. கணேசன்.

நிர்வாகசபை உறுப்பினர்களாகப் 10 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (107)

---

# "பாடசாலை வளர்ச்சிக்கு பெற்றோர் - மாணவர் ஆசிரியர் ஒத்துழைப்பு அவசியம்"

(ஆனைக்கோட்டை)

நவாலி கொத்தணியைச் சேர்ந்த பின்தங்கிய பகுதிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறுர்களின் நலன்கருதி அவர்களின் உடல் வளர்ச்சிக்கு உதவக்கூடிய ஊட்டச்சத்து மிக்க 'சூப்' கட்டிகளை மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினர் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும், இவை விரைவில் விநியோகிக்கப்படுமெனவும் நவாலி கொத்தணி அதிபர் திரு. ஐ. மனேகரன் நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை, பாடசாலை அபிவிருத்தி சங்கக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இப்பாடசாலை அதிபர் திரு. இ. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

திரு. மனேகரன் மேலும் கூறியதாவது:

''பாடசாலைகளின் வளர்ச்சி பெற்றேர், மாணவர், ஆசிரியர் இவர்களது மனம் கலந்த ஒத்துழைப்பு அவசியம். குறைகளை மட்டும் பெரிதுபடுத்திக்கொண்டிராது நிறைவுகளைப் பார்த்து நமது நோக்கங்களை அடைய ஏற்ற வழி முறைகளைத் திட்டமிட்டு அமைத்துச் செயல்படுத்த சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வரவேண்டும். பாடசாலையின் வளர்ச்சி குறித்தும்,பெற்றேர் அளித்துவரும் ஆதரவு குறித்தும் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். அதிபரின் அயராத உழைப்பு இதற்கு உதவுவதை என்னுல் காணக்கூடியதாக இருக்கிறது'' என்ருர்.

அதிபர் தமது உரையில்; பெற்றேரதும் ஆசிரியர்களதும் நல்லாதரவு நமக்குக் கிடைத்துவருவதாலேயே புதிய மாற்றங்களைச் செய்யக் கூடியதாகவிருப்பதாகவும், கொத்தணி அதிபர் அளித்து வரும் ஆக்கபூர்வமான உதவிகளுக்கு நன்றி கூறுவதாகவும் தெரிவித்தார், (139)

---

# "விளையாட்டுகள் மூலம் மாணவன் மனேபலம் பெறுகிறன்"

(யாழ்ப்பாணம்)

''உள்ளத்துக்கு உறுதிதருவது கல்விபோல, உடலுக்கு உறுதி தருவது விளையாட்டுக்களே. விளையாட்டுக்கள் மாணவர்களை உற்சாகப்படுத்தி உடலுறுதியை மட்டுமல்ல; மனேபலத்தையும் தருகிறது''

இவ்வாறு யாழ். வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா கூறினுர்.

வித்தியாலய அதிபர் திரு, கதிர் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் திரு.சி. தியாகராசா மேலும் பேசுகையில் ''ஆரம்ப பாடசாலைகள் மாணவர் வாழ்க்கையில் கல்வியின் அத்திவாரமாக அமைகின்றது. அவர்களின் எதிர்காலம் ஆரம்பக்கல்வியிலேயே தங்கியுள்ளது,' என்ருர்.

அதிபர் திரு. கதிர். செல்வநாயகம் உரையாற்றுகையில் ''கல்விக்குப் பக்கபலமாக விளையாட்டு விளங்குவதால் இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் முக்கியத்துவம் பெறுகிறது என்றும் உடலுறுதியும் மனேபலமும் உள்ள மாணவன்தான் எந்த இன்னல்களின் மத்தியிலும் ஆற்றல் உள்ளவன் என்றும் கூறினுர்.

சிறப்பு விருந்தினர்களாக கொக்குவில் கொத்தணி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் அணிகள் புனர்வாழ்வு நிதியச் செயலாளர் திரு. கு. கிட்ணர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் அப்பர் இல்லம் முதலாம் இடத்தையும் 'ஆரூரர்' இல்லம் இரண்டாம் இடத்தையும் 'சம்பந்தர்' இல்லம் மூன்ரும் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி யசோத தியாகராசா வழங்கினுர் (வி)

---

# மக்களின் குறைகளை நேரில் கண்டறிந்தார்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை பிரதேச சபைக்குட்பட்ட மக்களது பலவித பிரச்சனைகளையும் நேரில் தெரிந்துகொள்ளும்முகமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா இப்பகுதி மக்களை நேரில் சந்தித்தார். இச்சந்திப்பில் பலர் கலந்துகொண்டு தமது பிரச்சனைகளையும் குறைபாடுகளையும் நேரிலும்எழுத்து மூலமாகவும் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டை அமெரிக்க மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட இப்பாடசாலை அதிபர் திரு. ந, சிவபாதம் பேசுகையில்; ''இந்தப் பிரதேச சபையின் செயற்பாடுகள் இன்னும் திருப்திகரமானதாக அமைந்தாலேயே மக்கள் உரிய பயனை அடையமுடியுமென்றும் சில பகுதிகளில் இன்னமும் இருள்மண்டிக் கிடப்பதாகவும் இந்த நிலை விரைவில் மாற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இப்பிரதேச நியமனங்கள் விஷயத்தில் சரியானபடி விளம்பரப்படுத்தி இப்பகுதியினருக்கே முன்னுரிமை வழங்க ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

ஆனைக்கோட்டை முன்னுள் கிராமசபைத்தலைவர் திரு. சி. மார்க்கண்டு பேசுகையில்; மிகப் பழைமை வாய்ந்த தெருக்கள் திருத்தப்படாத நிலையிலிருப்பதாகவும் இவை கூடிய விரைவில்கவனிக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

பதிலளித்துப்பேசிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ''தற்போது யாழ். மாவட்டம் 129 மில்லியன் ரூபா மின் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளதாகவும் இதனுல் புதிய வேலைகள் நிறுத்தப் பட்டுள்ளதாகவும் புதிய பகுதிகளுக்கு மின்சார விநியோகம் கொடுக்க முடியாமைக்கு இதுவும் ஒரு காரணமென்றும்கூறினுர்.

பிரதேசசபை நிர்வாகம் மாவட்டசபையிடமும், அதன் பினனர் மாவட்ட நிர்வாகம் திருகோணமலைக்கும் மாற்றப் பட்டிரும்பதுவும் சில தாமதங்களுக்குக் காரணங்கள்எனவும் அவர் மேலும் தெளிவுபடுத்தினுர்.

நவாலி சனசமூக நிலையப் பகுதிக்கும் ஆனைக்கோட்டை சுதுமலை வடக்குப் பகுதிக்கும் மின்சாரம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தம்முன் வைக்கப் பட்ட மற்றைய பிரச்சனைகளுக்குக் கூடிய விரைவில் தம்மாலான இயன்ற தீர்வு காண முயற்சிப்பதாகவும் அவர் உறுதி தெரிவித்தார். (139)

---

# இலக்கிய மன்றம்

(நாவற்குழி)

மட்டுவில் தெற்கு வளர்மதி கல்வி நிலையத்தில் இலக்கிய மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இம்மன்றத்தின் நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: செல்வன் வே.அன்பழகன், உபதலைவர்: செல்வி ம. ஜெறூமலர், செயலாளர்; செல்வி சி. மஞ்சுளா, உப செயலாளர்: செல்வன் கு.பிரபாகரன், பொருளாளர்: செல்வி சி. சுகிர்தா, உப பொருளாளர்: செல்வன் ம. பார்த்திபன். நிர்வாகசபை உறுப்பினர்களாக மூவர் தெரிவுசெய்யப்பட்டனர். (107

---

# "ஒழுக்கம் - ஒற்றுமையை விளையாட்டுப் போட்டி சிருருக்கு ஏற்படுத்தும்"

(யாழ்ப்பாணம்)

''உடற்சுகம், மனச் சுகம், நேர்மை, ஒழுக்கம்,ஒற்றுமை, கட்டுப்பாடு போன்ற உயர்ந்த பழக்கவழக்கங்களையும் விளையாட்டுப் போட்டிகள் சிறுர்களுக்கு ஏற்படுத்தும். மூன்று பாலர் பாடசாலைகள் ஒன்றிணைந்து நடத்திய இவ்விளையாட்டுப் போட்டி முன்மாதிரியாகும். இது ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது''.

இவ்வாறு யாழ். சர்வோதயத்தினுல் நடத்தப்படும் கொக்குவில் காந்திஜீ பாலர் பாடசாலை, பாரதி பாலர் பாடசாலை, வராகி பாலர் பாடசாலை ஆகிய மூன்று பாலர் பாடசாலைகளும் ஒன்றிணைந்து நடத்திய மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் நல்லூர் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் மங்கள விளக்கேற்றினுர்.

சர்வோதயப் போதனுசிரியை திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. ஆனைக்கோட்டை உயரப்புல வித்தியாலய அதிபர் திரு. க. திருநாவுக்கரசு, கொக்குவில் கிராம சேவை அலுவலர் திரு. வசந்தகுமார், யாழ். தமிழீழ விடுதலை இயக்கப் பொறுப்பாளர் திரு. பொன். மாஸ்டர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (54)

### போக்குவரத்து சபையைத் தொடர்ந்து
# அரச நிறுவனங்களையும்
## மக்கள்மயப்படுத்த ஆலோசனை

(கொழும்பு)

இ. போ. ச. பஸ்சேவையை மக்கள் மயமாக்கும் திட்டம் செயல்வடிவம் பெறுவதைத் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிவரும், கூட்டுறவுத்தாபனங்கள், சபைகள், அரசுக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களையும், மக்கள் மயப்படுத்த நிதி அமைச்சின் பொது முதலீட்டு முகாமைத்துவ சபை திட்டமிட்டு வருகிறது.

இதன் பிரகாரம், தற்போது நஷ்டத்தில் இயங்கி வரும் சுமார் 40 கூட்டுத் தாபனங்களும், அரசுக்கு சொந்தமான 30 வர்த்தக நிறுவனங்களும் விரைவில் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளன.

நஷ்டத்தில் இயங்குவதாக இனம்காணப்பட்ட மேற்படி நிறுவனங்களை மக்கள்மயப்படுத்த அமைச்சரவையின் அங்கீகாரத்தை பொது முதலீட்டு முகாமைத்துவ சபை எதிர்பார்த்துள்ளது.

இத்திட்டத்தின்படி, சுமார் 200 கூட்டுத்தாபனங்கள் சபைகள் படிப்படியாக மக்கள் மயப்படுத்தப்படும் என்றும் அறியப்படுகிறது. (அ)

### பாகிஸ்தானும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லும் கவசமோட்டார் ஒன்றையும் பாகிஸ்தான் காட்சிக்கு வைத்திருந்தது.

இந்தியா ஏற்கனவே யுத்தத் தாங்கிகளை சொந்மாகத் தயாரித்து வருகின்றது.

சோவியத் யுத்தத்தாங்கிகளின் மாதிரி அடிப்படையில் இவை அமைந்திருக்கின்றன.

### பயிற்சி கருத்தரங்கு

(கொழும்பு)

தமிழ், ஆங்கிலம், சிங்களம் மூன்று மொழிகளையும் அரசாங்க உத்தியோகத்தர்கள் கற்பதற்கு வசதியாக கனடா அரசாங்கத்தின் உதவியுடன் இன்று திங்கட்கிழமை பயிற்சி வகுப்பொன்று கொழும்பு பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சில் ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

### அதிபர்களும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் கூறியதாவது:

அரசாங்க சம்பளத்தை பெற்றுக்கொண்டு தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களை அதிபர்கள் தடுத்து நிறுத்த வேண்டும்;

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளை பெற அதிபர்கள் முன்வரவேண்டும். சனி ஞாயிறு ஆகிய லீவு நாட்களில் விசேட வகுப்புகளை வைத்து மாணவர்களின் பாடவிதானங்களை முடிக்க வேண்டும்.

இன்று பாடசாலைக்கு சென்ருல் ஒரு புதியவிடயத்தைக் கற்கலாம் என்ற எண்ணம் மாணவர்களிடம் உருவாக வேண்டும் என்ருர். (153)

## விண்ணில் பயணமாகும் இந்திய செயற்கை கோள்

(சென்னை)

இந்திய செயற்கைக் கோள் இன்சட் 'டி' நாளை செவ்வாய் கிழமை விண்ணில் . செலுத்தப்படும்.

அமெரிக்காவிலுள்ள கென்னடி விண்வெளி நிலையத்திலிருந்து இது விண்ணுக்கு அனுப்பி வைக்கப்படும்.

### சண்டிலிப்பாயில்
## வீடமைப்பு விண்ணப்ப படிவத்திற்கு தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 15 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் கிராமிய வீடமைப்புகடன் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்த வீடமைப்புக் கடன் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 15ம் திகதியளவில் இங்கு விண்ணப்பப்படிவங்கள் வந்துசேர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலக உயரதிகாரி ஒருவர் இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (72)

### உ. அ. அ. பணிமனையில்
## நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு வெற்றிடம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தர் பதவி கடந்த பல மாதங்களாக நிரப்பப்படாது வெற்றிடமாக இருக்கின்றது. அத்துடன் இப்பணிமனையில் எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள் ஆகியோருக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மேலும் இப்பணிமனையில் கதிரை, மேசை போன்ற தளபாடங்களும் போதுமானதாக இல்லை என்றும் சில பகுதிகளுக்கு மின் விசிறி இதுவரை பொருத்தப்படவில்லை என்றும் அறியப்படுகின்றது. (72)

### ஜுலை மாத
## மருதமடு திருவிழா சிறப்பாக நடக்க ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

மருதமடு மாதா திருவிழா ஜுலை மாதம் இரண்டாம் திகதி நடைபெறவிருக்கிறது. நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மருதமடுத் திருப்பதியின் ஜுலை மாத திருவிழா வெகு சிறப்பாக நடைபெறத் தக்க முன் ஆயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஏ. சி செபநாயகம் மருதமடு கோயில் பரிபாலகர் அருட் திரு. அ. யேசுராசா மற்றும் அரசாங்க அலுவலர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் குடிநீர் வசதி, சுகாதாரம், வைத்திய வசதிகள் போக்குவரத்து ஆகியன குறித்து தக்க முன் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று முடிவு எடுக்கப்பட்டது.

ஏற்கனவே மடுத்திருப்பதியிலுள்ள வீடுகள் யாவும் யாத்திரிகர்களினுல் தங்கள் பாவனைக்கென ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி. வண, தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இம்முறை அதி. மேற்றிராணியார், அதி. வண. நிக்கலஸ் மாக்ஸ் பெர்னண்டோ ஆண்டகை தலைமையில் திருவிழா ஆராதனைகளை நடத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ளார். (153)

### இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளைச் சேர்ந்தவர்கள் இப்பயிற்சி நிலையத்தில் பத்து மாதகால பயிற்சி பெறவுள்ளனர்.

வடபகுதியில் முன்னைய அரசாங்கம் தீவிர இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளையில் முன்னாள் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பாகிஸ்தான் அரசு, இலங்கை இராணுவ உயர் அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்து உதவவேண்டும் என்று விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கையர்களுக்கும் இந்நிலையத்தில் முதல் தடவையாக பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள முதன்முதலாக பிறிகேடியர் லக்கிஅலகம தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

### வடக்கு-கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற மகாநாட்டுக்கு வந்திருந்த அவர் தெரிவித்ததாவது: சாவகச்சேரியில் தும்பு பதனிடும் தொழிற்சாலை ஒன்று 15 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது.

இன்னும் ஒரு மாதத்தில் நீர்வேலியில் வாழைநார் மூலம் பெட்டி, கயிறு என்பன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று ஒன்றரை லட்ச ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மன்னாரில் தச்சுத்தொழில் நிலையம் ஒன்றும் நிறுவப்படும்.

ஐந்து வருடத்திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்பிலும், பழுகாமத்திலும் கைத்தறிக் கிராமங்கள் உருவாக்கப்படும்.

அமைச்சில் இப்போது 10 ஜெனறேற்றர்கள் உள்ளன. இவற்றில் ஒன்று மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்படும்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையையும் அமைச்சு பொறுப்பேற்றுள்ளது இதைப் புனரமைப்பதற்கான நிதியை வழங்குமாறு மத்திய புனர்வாழ்வு அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (121)

## இன்று வட்ட அவை உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அடங்கும் கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய வட்ட அவை உறுப்பினர் தெரிவுகள் பின்வரும் இடங்களில் இன்று நடைபெறும்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு வட்டுமேற்கு மாவடிச் சந்தியில் அமைந்துள்ள வட்ட அவை செயலகத்தில் காலை 9-00 மணிக்கும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் மாலை 2-00 மணிக்கும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, சுன்னுகம் நாகம்ஸ் தியேட்டரில் மாலை 4-00 மணிக்கும் நடைபெறும்.

அந்தந்தப் பிரிவு சிற்றூரவை செயற்குழு உறுப்பினர்கள் தவருது சமுகம் தரும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கேட்டுக் கொள்கிறது.

## 'காஸ்' அடுப்பு விபத்தில் இளம் பெண் பலி!

(கொழும்பு)

'காஸ்' அடுப்பு தீ பிடித்துக் கொண்டதில் எயர்-லங்கா விமானப் பணிப்பெண் பயங்கர தீக்காயங்களுக்குள்ளாகி இறந்த பரிதாப சம்பவம் நாவலவில் நிகழ்ந்துள்ளது.

தமது நண்பர் ஒருவரின் திருமணச் சடங்கில் கலந்து கொண்ட ஷிராஸ் முகம்மது தம்பதிகள் அதிகாலையில் வீடுதிரும்பியிருந்தனர். கணவனுக்கு கோப்பி போடுவதற்காக மனைவி ஹெலறீன் 'காஸ், அடுப்பைப் பற்ற வைத்த போது திடீரென்று தீப்பற்றி அவரது முகம், நெஞ்சு முழுவதும் எரிகாயங்கள் ஏற்பட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இறந்துள்ளார்.

28 வயதான ஹெலறீன், எட்டுவருடங்களுக்கு மேலாக விமானப்பணிப்பெண்ணுக பணிபுரிந்துள்ளார். இவரும் கணவனும் விரைவில் அவுஸ்திரெலியாவுக்கு குடிபெயர இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

### இடைக்கால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எமக்கு சரியாக நீதி செலுத்த தவறி எம்மை மீண்டும் அடக்கு முறைக்கு ஆளாக்க முயற்சித்தால் தமிழ் பேசும் இனத்தின் சுயநிர்ணய அடிப்படையில் எமதுபோராட்டத்தை ஆரம்பிப்போம்.

இன்று தமிழீழத்தில் தேசிய விடுதலைப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எமது மாணவர் மத்தியில் தெளிவான வரலாற்றுக் கருத்தோட்டம் இல்லாமல் இருக்கிறது. ஆயுதமோகத்திலுலோ, வன்முறை மோகத்திலுலோ எமது ஆயுதபோராட்டம் தோன்றவில்லை. இன ஒடுக்கு முறையிலிருந்து எமது இனத்தின் விடுதலையை முன்னெடுக்கும் முகமாக எமது ஆயுதபோராட்டம் உருவாக்கப்பட்டது.

தலைவர் பிரபாகரன் கடந்த 17 ஆண்டுகளாக வடுதலை இயக்கத்தை கட்டியெழுப்பி முன்னெடுத்துச் சென்று சர்வ தேசபுகழ் பெற்றுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று தமிழ்மக்களின் பாதுகாப்பு அரணுக இருக்கிறது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு போராட்ட வரலாறுகளை தெளிவாக எடுத்து உரைக்க வேண்டும்.

யாழ். குடாநாட்டு இளைய சமுதாயம் பெற்ருேர்களினுல் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிருர்கள்.

ஐரோப்பிய நாடுகளில் ஆயிரக் கணக்கான யாழ். குடாநாட்டு இளைஞர்கள் அகதிகள் முகாம்களில் இருக்கிருர்கள்.

இந்த மண்ணின் புத்திஜீவிகள் நாட்டைவிட்டு ஓடுகிருர்கள். யாழ். மண்ணைச் சேர்ந்த 1200 வைத்திய நிபுணர்கள் லண்டனில் வேலை செய்கிருர்கள். பலமுறை நாங்கள் அழைப்பு விடுத்தும் இவர்களில் ஒருவரும் இந்த மண்ணின் மக்களுக்கு சேவையாற்ற முன்வரவில்லை. ஆனுல் வெளிநாட்டு வைத்திய நிபுணர்கள் இங்கு சேவையாற்ற முன்வருகிருர்கள்.

ஆசிரியர்கள் புதிய இளம் சமுதாயத்தை படைக்கவேண்டும். இந்த மண்ணுக்கு சேவையாற்ற எந்நேரமும் தயாரான புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ருர். (153)

### 40 லட்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்திட்டத்துக்கு என காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கியுள்ளதெனவும், மாணவர் தலா 10 ரூபா தவணைப் பணமாக செலுத்த வேண்டும் எனவும் காப்புறுதிக் கூட்டுத்தாபன உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் கல்வி பயிலும் சமயத்தில் மாணவன் ஒருவர் இறந்தால், 10,000 ரூபாவும், கை கால் அல்லது கண்பார்வையை இழக்கும் மாணவனுக்கு 5,000 ரூபாவும், நோய்வாய்பட்டு இரண்டு வாரங்கள் முதல் 26 வாரங்கள் சிகிச்சை பெறும் மாணவருக்கு ரூபா 50 முதல் ரூபா 1,500 வரை, காப்புறுதிப் பணமாக வழங்கவுள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதற்கென சகல பாடசாலைகளிலும் காப்புறுதிச் சங்கம் அமைக்கப்பட்டு, ஆசிரியர்கள் துணையுடன் இயக்கப் படவுள்ளது. (அ)

### வெளிநாட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க்குச் செல்வதற்கான விசாவைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்டமை கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

### முன்னாள் படை வீரர்களின்
## கொள்ளை முயற்சி முறியடிப்பு

(கொழும்பு)

வங்கியில் வைப்பு செய்யவென ஒருவர் கொண்டுவந்த பெருந்தொகையான பணத்தை முன்னுள் விமானப் படை வீரர்கள் இருவர் கொள்ளையடித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பியோடியபோது பாதுகாப்பு விரர்கள் அவர்களை துரத்தி மடக்கிப் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டை சதாம் வீதியிலுள்ள வங்கியில் வைப்பிலிடுவதற்கு பணத்துடன் வந்தபோது இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளிலும் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த பல பகல் கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்கள் இருவரும் சம்பந்தப்பட்டுள்ளமை பொலிஸ் விசாரணையின்போது தெரிய வந்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.